உ

சிவமயம்.

24508

# பெரியபுராணம்

என்றுவழங்குகின்ற

# திருத்தொண்டர்புராணம்.

இஃது

தொண்டமண்டலத்துத் துளுவவேளாளர்களில்

ஸ்ரீமான்

திருத்தொட்டிக்கலை

கேசவமுதலியார்

பௌத்திரர்

தொழூஊர்மிட்டா ஜமீந்தார்

கிருஷ்ணசுவாமிமுதலியார்புத்திரர்

தொட்டிக்கலை

கேசவமுதலியாரால்

கீர்த்தனைரூபமாகப்பாடி

குருதரிசன முதலான

தனிக்கீர்த்தனைகளுடன்

இந்துவித்தியாநிலய அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டன.

MADRAS.

20th April 1865.

*Copy Right Registered.*

உ

சிவமயம்.

பெரியபுராணவரலாறு.

# சேக்கிழார்புராணக்கீர்த்தனை

இராகம் - கல்யாணி - ஜம்பைதாளம்.

பல்லவி.

நீ ருத்தொண்டர்சரிதத்தை விரிவாயெடுத்துரைத்தோர்
திருவருண்மொழித்தேவரே.

அநுபல்லவி.

திருவவதாரந்தொண்ட நாட்டிற்குன்றத்தூரில்
சிறந்தவேளாளர்குலஞ் செய்தவப்பேற்றினால்.

சரணங்கள்.

அருமையாய்ச்சேக்கிழார் மரபில்தம்பியார்பா
லுருவாயருடன் அவதாரஞ்செய்தநாமம்

## சேக்கிழார்புராணக்கீர்த்தனை.

அருண்மொழித்தேவரென அடைந்துகல்வியறிவு
அரன்அடியார்பத்தி சிறந்து
இருந்ததைஅனபாயச் சோழராஜனறிந்து
இவரையழைத்துமந் திரித்தலைமைகொடுத்து
இருக்கச்சோழதேசத்தில் இருக்குநாகேச்சுரம்போல்
இவர்குன்றத்தூரிலொரு சிவப்பிரதிஷ்டைசெய்து.க

இருக்குங்காலந்தராஜன் இருந்துஞ்சைவநூற்சிவக
இராஜன்சரிதம்சைன இலக்கியத்தைப்பாராட்டி
இருந்ததைக்கண்டிவர் அரசன்சபையைவிட்டு
வருவதைநிதங்கண்டு
அரசனென்காரணம் அறைகுவீரெனஇவர்
அவரைநோக்கிஇம்மை மறுமைக்கும்பயன்படா
ஒருகதையைவிடநமது பரமசிவமாட்கொண்ட
வன்றொண்டரருள்திருத் தொண்டத்தொகையதற்கு.

திருநாரையூர்நம்பி யாண்டார்நம்பிசொல்லாத்
திருப்பிள்ளையார்பொருளுரைக்கத்திருத்தொண்டர்
பெருமைப்பாட்டைக்கலித் துறையந்தாதியாய்ச்செ
பெருங்கதை யெனக்கேட்டு [ய்த

## சேக்கிழார்புராணக்கீர்த்தனை.

அரசரானந்தமடைந் தன்பர்சேக்கிழாரோயதை
அருள்செய்வீர்விரிவாயென்று பொருளைமிகக்கொ
[டுக்க
அரல்தலஞ்சிதம்பரத்தை அடைந்தன்பர், சபைதனில்
அடியெடுத்துத்தந்தருள ஆண்டவனைவேண்டிடவே.

ஒருஅசரீரிவாக்கு உலகெலாமுணர்ந்தோதற்
கரியவன், என்றுமுதல் அடியைக்கொண்டுமுழுது
[ம்பாடி.
அரசன்அனபாயன் அறிந்துசிதம்பரமடைந்து
அன்பர்திருவடியை வணங்கி
திருவம்பலந்தனைத் தரிசித்துப்பணிந்திடவே
திருவருளால்தொண்டர்கள் பெருமைநிறை வேறி
அரசனே, என்றசரீரி திருச்சிலம்பொலியுடன் [னது
அருளிச்செய்துகனகசபை அருகில்பிரசங்கஞ்செ
[ய்து. ௬.

ஒருவருடம்பின்னரிந்தத் திருமுறையைத்தங்கத்தட்டி
லிருத்தியானைமீதுகிராம பிரதக்ஷிணஞ்செய்வித்து
அரசன்முதலடியார்கள் அம்பலத்தும்அன்பரையும்
அடிபணிந்துவிடைபெற்று

## சேக்கிழார்புராணக்கீர்த்தனை.

புரவலன்தனக்குமந் திரியராய்ப்பாலறுவா
யனாயேவைத்துக்கொண்டவர் அரசியற்றிப்புகழ்பெ
அரியசேக்கிழார் துறவாச்சிரமத்திலேயிருந்து [ற்றார்
அன்பன்கேசவன் துதிக்கும் அரன்பதமேவினார். ௫.

சேக்கிழார்புராணக்கீர்த்தனை

முற்றிற்று.

அருண்மொழித்தேவர்

அடியிணைசரணம்.

சிவமயம்.

# பெரியபுராணமென்று
வழங்குகின்ற
# திருத்தொண்டர்புராணக்
# கீர்த்தனைகள்.

## காப்பு.

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

திருவருளேசற்குருவடிவாகித்
திகழுமோர்துணையதுகொண்டு
அருவருளாட்கொண்டரும்பதம்பெற்ற
வறுபத்துமூவரோடனைவர்
பருவருட்சரிதைகீர்த்தனையாகப்
பாமரன்புவிதனிற்பாடி
இருவருங்காண்டற்கரியவீசன்ற
னிணையடியெளியனெய்துவனே.

## சுந்தரமூர்த்திநாயனார்.

இராகம் - பிலகரி - ஆதிதாளம்.

பல்லவி.

திருக்கைலாயத்திலே பரமனுக்கு
திருநீறுமலர்ப்பணி செயுமாலாலசுந்தரர்.

அநுபல்லவி.

ஒருநாள்நந்தவனத்தில் ஒண்மலர்கொய்யபோது
உமைக்குகந்தசேடியர் அனிந்திதைகமலினி
இருவர்மீதிச்சைகொள்ள ஈசனறிந்ததை
இப்புவியிற்போகிக்கஇசைத்துத்தடுத்தாட்கொள்ள

சரணங்கள்.

திருநாவலூரிற்சைவ மறையோர்சடையனார்சேய்
திருநம்பியாரூரனென்றேயவதரித்து
பருவம்வந்துபுத்தூரில் மறையோர்சடங்கவியார்
பக்குவப்புத்திரியைப்பாணிக்கிரகணஞ்செயுங்கால்.

திருவருட்டுறையுறை பரமசிவமேயொரு
விருத்தவேதியர்போல்வந்து தடுத்தடிமையோலை
மருமணப்பிள்ளையித்தா வென்றுபேசஐயர் [காட்ட
மகிழ்ந்தருட்டுறைபுக்கி மறைந்துகாட்சியருள. உ.

அப்பர்பித்தாபிறைசூடி யென்றுபதிகமோதி
அரன்தலஞ்சிதம்பர முதலாப்பதிகம்பாடி

பின்னதிகைசேர்ந்தன்பர் சயனித்திருந்தபோது
முன்விருத்தர்போலச்சிவன்றன்பாதஞ்சிரத்திற்பட்டு
திருவாரூர்ச்சென்றுஅன்பர் பரவையெனும்பேர்பெ
பிறந்தகமலினியும் பருவமடைந்துசுவாமி [ற்று
தரிசனஞ்செய்யக்கண்டு விரும்பிவேண்டிவன்மீகர்
திருவருளால்மணம் புரிந்தின்பநுகர்ந்தன்பர். ௪.

திருக்கூட்டம்வணங்காது விறன்மிண்டர்திறல்கண்டு
திருத்தொண்டத்தொகைசெப்பியருளாற்சிவகணங்கள்
வரக்குண்டையூர்நெல்லும் திருவாரூர்வந்துசேர்ந்து
திருப்புகலூரிற்செங்கல் அருளாலரும்பொன்னாகி.

விருத்தாசலத்திற்பரன் தரும்பொருளாற்றிட்டு
திருவாரூர்த்தடந்தனில் வரவருளடைந்தன்பர்
திருவொற்றியூர்தலத்தில் அனிந்திதைசங்கிலியாய்
திருவவதாரஞ்செய்து இருந்ததைக்கண்டன்பர். ௬.

விரும்பித்தியாகேசர்தம்மை வேண்டிமகிழடியில்
பிரியாப்பிரமாணம் உரைத்துச்சங்கிலியார்க்கு
திருவருளாலேமணம் புரிந்திருந்துசிலநாள்
பிரிந்தாரூர்ப்போம்வழியி லிருகண்களிழந்தன்பர்.

ஒருகண்காஞ்சியிற்பெற்றுத் திருவாரூர்த்தலமேவி
மறுகண்வன்மீகர்தந்து பரவைபிணக்குத்தீர்க்க
இருவருங்காணுதற் கரியவர் தூதுசென்று
இருவருங்கூடியின்புற் றிருந்தவணுகிசென்று. ௮.

ஒருமுதலைமறையோர் சிறுமதலைதனைவிழுங்கி
பரமசிவனைத்துதித்துப் பதிகம்பாடவேயன்பர்
கரையில்முதலைவந்து உமிழ்ந்தசிறுவனுக்கு
கலியாணஉபநயநம் புரிந்துசுந்தரர்சென்று. ௯.

திருவஞ்சைக்களத்தினிற் பரமசிவனையன்பாய்
தரிசிக்கும்போதுசிவ கிரியினின்றும்வெள்ளையானை
வரவுகண் மீதிலேறி வேந்தர்சேரருடனே
வரங்கொள்கேசவன்துதி வடகயிலைமேவினர். ௧0.

---

## தில்லைவாழந்தணர்.

இராகம் - சஹானு - அடதாளம்.

பல்லவி.

தில்லைச்சிதம்பரத்தே - தாண்டவரோடு
தில்லைமூவாயிரரே.

அநுபல்லவி.

தில்லைச்சிதம்பரத்தில் கனகசபேசர்தம் [ரே.
திருவடிதினமருச்சிப்பவர்தில்லைவாழந்தணரென்போ

சரணங்கள்.

தாண்டவரோடவர்மூ வாயிரர்நால்வே
தங்களத்தி யயனஞ்செய்பவர்
ஆண்டவர்கள்கலை ஆறையுங்கற்று
அக்கினிகள்மூன்றையும் அமைப்பவர்விதிப்படி. ௧.

குற்றமில்லாவமிசங் கூடியுதித்தவர்
கிரகஸ்தாச்சிர மத்தையேநாடுவோர்
சற்றுமறவாது ஆறுவகைத்தொழில்
செய்பவர்விபூதி சைவருத்திராக்ஷம். ௨

தரிப்பவர்விதிப்படி காமிகமுதலாய்
இருபத்தெட்டுச்சைவாகமம்
பிரதிபாதிக்கப்படும் யாகபூசைகையும்
பிரதிதினமனுஷ்டிப்போர் பாரிடத்தங்கேபோரு. ௩

திருத்தொண்டத்தொகைபாடச் சுந்தரமூர்த்தி
தில்லைவாழந்தணரெல்லா ரேரிலே
அரனேயெடுத்துச்சொல்லும் பேரருளுடையார்
அன்பன்கேசவன் துதி அம்பலத்தந்தணர். ௪

---

## திருநீலகண்டநாயனார்.

இராகம்-கேதாரகௌளம்-ஏகதாளம்.

பல்லவி.

திருநீலகண்டர்மீதன்பா லைம்புலனறந்
திருநீலகண்டரென்போர்.

அநுபல்லவி.

திருநீலகண்டரென்போர் தில்லைநகர்தனில்வாழ்ந்
திருந்தகுயவர்வழுவா தில்லறநடத்திவந்தோர்.

### சரணங்கள்.

அரனடியார்பத்திகளிற்
சிறந்தவர்குலத்துக்கேற்ப
அருங்கலங்கள்வனைந்துவிற்று
அரனடியர்க்கோடுமீவர்
ஒருநாளோர்வேசியிடங்
குறுகினதைக்கற்பின்மிக்க
உரியமனைவியாரறிந்து
ஊடலைத்தீர்க்கும்பொருட்டு.

இரப்புரைகள்சொல்லிக்கிட்ட
எம்மைத்தீண்டுவீராயில்
திருநீலகண்டமென்று
பெரியவாணையிடமனைவி
திருக்குயவரெம்மையென்றதை
துடியிடையாரனைத்துமென்று
பருவமெல்லாம்போக்கியபின்
பரமனிவரும்பொருட்டு.

ஒருபரமயோகியர்போல்
வரவவரைவணங்கிநிற்க
ஒப்பிலாதவோடொன்றை
வைத்துத்தாருமென்றளித்து

# திருத்தொண்டர்புராணக்கீர்த்தனைகள்.

பரமயோகியர்பலநாட்
    பின்னர்வந்துஓடுகேட்க
பரமபத்தர்பார்த்திலாது
    பதைபதைத்துத்திகைத்துநின்று.

அருமையானஓட்டைக்காணேன்
    தருகிறேனோர்புதியவோடு
அருள்செய்வீரென்றன்பர்வேண்ட
    பரமயோகியர்வெகுண்டு
அரியஓட்டைக்கவர்ந்துகொண்டு
    அறிகிலேனென்றசத்தியம்
புரிகிறாயுன்மனைவிகையைப்
    பிடித்துமுழுகிஇல்லையென்பாய்.

உரியமனைவிகைப்பிடித்து
    ஒருங்குமுழுகாதோர்சபதம்
தெரிவித்துப்பின்தடிபிடித்துத்
    திருக்குளத்தில்முழுகிநிற்க
பருவம்வந்துபரமயோகி
    பரமசிவனாகத்தோன்றி
பத்தன்கேசவன்துதிக்கும்
    பரமசிவகிரிக்குச்சென்றார்.

## இயற்பகைநாயனார்.

இராகம் - காம்போதி - அடதாளம்.

பல்லவி.

இயற்பகைபோலுமுண்டோ - மனைவியை
இறைவர்க்கீந்தோருண்டோ.

அநுபல்லவி.

இயற்பகைநாயனார் காவிரிப்பூம்பட்
டினத்திலேவைசியர் இலிங்கசங்கமபக்தர்.

சரணங்கள்.

அரனடியவரெதை விரும்பினும்அவைகளை
ஔதாரியமாக அளிக்குமன்பரிடத்தே
ஒருநாள்பரமசிவன் விடபுருஷவேட
மறையோனாகிபூதி பிரகாசிக்கவர. க.

அன்பினோடவரை யழைத்தருச்சித்து
அடியேன்செய்தவத்தால் அருள்செய்ததியாதென
இல்புற்றுச்சிவனடி யார்களெவைகளை
இச்சித்துக்கேட்கினும் ஈதலையறிந்து. உ.

விரும்பிவந்தேனுந்தன் மனைவியையானென
விரைந்துசென்றுகற்பிற் சிறந்தமனைவியே
அரனடியார்க்குன்னை அளித்தேனின்றைக்குநீ
அவருடன்செல்லென ஆக்கினைக்குட்பட்ட. ௩.

மனைவியைமறையோர் கொண்டுபோகும்போது
இனத்தார்தடுத்தோரைத் துணித்துஇயற்பகை
தனைமீளப்பிறுக னழைத்துக்கேசவன் றுதி
தற்பரன்சிவகிரி தம்பதியர்சென்ருரே. ௪.

## இளையான்குடிமாறநாயனுர்.

இராகம்-தனுசரி-ஆதிதாளம்.

பல்லவி.

இளையான்குடிமாறர்போல் - இறைவர்க்கு
முளைநெல்லமுதுசெய்தோர்யார்.

அநுபல்லவி.

இளையான்குடியென்னு மூரினில்வேளாளர்
அளவிறந்தசெல்வம் அமைந்தானடியர்கள்.

சரணங்கள்.

அவரவர்கள்வேண்டும் அமுதுசெய்வித்திட
சிவனருளாலவர் செல்வம்போயுஞ்செய்ய. ௧.

ஒருநாளிரவினில் கருணைகான்மழையில்
அரனடியார்போல வரவன்பர்மகிழ்ந்து. ௨.

அரனடியார்க்கமு தளிக்கவன்பரன்று
ஒருபோதுணவுக்கும் வறுமையால்வருந்தியும். ௩.

விதைத்துமுளைத்தநெல்லும் வீட்டுச்சிறுபயிறும்
விளைந்துகொண்டுவந்து வரிச்சுகளெரித்து. ௪.

விரவில்முறுகறி விதங்களமைத்துச்சென்று
அரனடியார்தம்மை அழைத்தவரொழுந்து. ௫

பரஞ்சோதிரூபமாய்ப் பார்த்தன்பர்மனைவியும்
பத்தன்சேசவன்தொழும் பரமன்பதமேவினர். ௬

---

## மெய்ப்பொருணாயனார்.

இராகம் - கமாஸ் - ஆதிதாளம்.

பல்லவி.

மெய்ப்பொருளாரே சிவவேடத்தோரே
மெய்ப்பொருளென்றெண்ணியேயுனை
மெய்ப்பொருளைமேவினோரே.

அநுபல்லவி.

மெய்ப்பொருணாயனார் சேதியரே
மெய்ம்மலாடமன்னர் கோவலூரே
மெய்யன்பர்சிவனடியார்க்குத்தருமநெறி
மனுநீதிதவராது அரசையியற்றும்போது.

சரணங்கள்.

முத்தநாதனென்னுமோர் அயலரசே
புத்தக்களத்திற்றோற்றும் இவருடனே-சிவ
பத்தர்வேடங்கொண்டவன் அரண்மனைபுகுந்துநம்
பத்தனையுடைவாளால் குத்தஅவர்வணங்கி. ௧

பத்தர்சிவவேடமெய்ப் பொருளென்றே
 நத்தன்கண்டுகொல்லத் தடுத்தன்றே
முத்தனைக்கொல்லாது நகர்ப்புறம்விடச்செய்து
 பத்தன்கேசவன்தொழும்பரமன்பதமடைந்தார். ௨.

## விறன்மிண்டநாயனார்.

இராகம்-கரகரப்பிரியை-ரூபகதாளம்.

பல்லவி.

தொண்டரடிவணங்கா - வன்
தொண்டரும்பரனும் புறகென்றவிறன்மிண்டர்.

அநுபல்லவி.

தொண்டர்திருச்செங் குன்றூர்வேளாளர்
அண்டர்பிரானடி யனைமுனம்வணங்கும்.

சரணங்கள்.

திருவாரூர்தனில் ஒருநாள்சுந்தரர்
திருத்தொண்டரடி வணங்காதேகவே. க.

வன்றொண்டன்புறகு வலியவேயாண்ட
பொன்சடைமுடியனும் புறகென்றன்பர். உ.

ஆரூருமதிந் தன்பர்சங்கமபத்தி
சீர்தொண்டத்தொகை சிறப்பாய்ப்பாட. ந.

நேசர்மனமுருகி கேசவன்போற்றிடும்
ஈசனருள்புரிந்து இருக்குங்கணநாதர். ச.

## அமர்நீதிநாயனார்.

இராகம் - மத்தியமாவதி - ஏகதாளம்.

பல்லவி.

அமர்நீதிதமதடி மைத்திறமொத்தது
அமரர்பிரான்கோவணமே.

அநுபல்லவி.

அமர்நீதிநாயனா ரவர்கள்பழையாறை
அமருஞ்வணிகர்மகா ஐசுவரியமுள்ளவர்.

சரணங்கள்.

அரனடியார்களை அமுதுசெய்வித்தவர்
குறிப்பறிந்துகந்தை கீழ்கோவணங்கொடுப்போர்
திருநல்லூரெனுஞ்சிவத் தலத்தில்மகோற்சவ
தரிசனஞ்செயவரும் அரனடியார்கள்வந்து. ௧.

திருவமுதுசெய்யும் பொருட்டொருதிவ்விய
திருமடங்கட்டுவித் தறுசுவையோடிட்ட
பரனேபிராமண பிரமசாரியர்போல
இரண்டுகௌபீனத்தை ஒருதண்டிலேகட்டி. ௨.

வரவமர்நீதியும் வணங்கியமுதுசெய்ய
வேண்டமறையோரும் ஒருகோவணமீந்து
திருக்காவிரிதனில் தீர்த்தமாடிவருவோம்
வருமளவுமிதைநீர் வைத்திருமென்றளித்து. ௩.

பிரமசாரியர்ஸ்நானம் பண்ணிநனைந்துவந்து
பெருமைகொள்கோவணம் பிடித்துக்கேட்கவே
அரியகோவணத்தை அமர்நீதிகாணாது
தரவேறோர்கோவணம் தடுத்துவெகுண்டனையர். ௪.

இருக்குமோர்கோவணம் இடையொருகோவணம்
ஈந்திடுவெல்லையர் இட்டுத்தராசினில்
சரியாகவமர்நீதி சகலசொத்துப் வைத்தும்
அரியகோவணம்இடை அதிகப்பட்டிருக்கவே. ௫.

அரியமனைவிசேயும் அமர்நீதிதாமும்போய்
அடிமையாகத்தட்டில் அமர்ந்திட இடையொத்து
கிருபாநிதிதோன்றி கேசவன்துதிசிவ
கிரிக்குச்சென்றார்தட்டே சூரர்விமானமாகி. ௬.

## எறிபத்தநாயனார்.

இராகம் - பைரவி - ஆதிதாளம்.

பல்லவி.

எறிபத்தர்போலெவரோ - சிவபத்தர்கள்
குறையைப்போக்கினோரெவரோ.

அநுபல்லவி.

எறிபத்தநாயனார் கருவூரில்சிவபத்தி
சிறந்தாவடியர்தந் திறல்கண்டுதுணிப்பவர்.

சரணங்கள்.

கருவூரானிலைக் கடவுள்தமக்குச்சாத்த
மருமலர்சிவகாமி யாண்டார்
[illegible]லைத்துகொண்டுசெல்ல வரசரானைச்சிந்த
வறிந்தெறிபத்தரும் எறிந்துமழுவினாலே. ௧.

கரியும்பாகரைவரை யுங்கொன்றதின்றனை
அரசரறிந்து தம்மையும்
அரிந்திடஉடைவாளை உருவிநீட்டபத்தர்
அறிந்தாசரவ்வை அரிந்திடத்தம்மையே. ௨.

உருவியவாளை வாங்கிஎறிபத்தர்
அரிந்துகொள்ளத் தொடங்கவே
புரவலன்வாள்தனைப் பிடித்துக்கொள்ளப்பரன்
அருளால்கிந்நியதென்று அசரீரிஎழுந்தது. ௩.

கரிபாகரைவரோடும் உயிர்த்தெழுந்து
இருவரன்பும் விளைந்து
கருணைக்கடல்துதித்து அரியஎறிபத்தர்
சேசவன்துதிசிவ கிரிசனைநாதரான. ௪.

---

## ஏனாதிநாதநாயனார்.

இராகம் - ஆகிரி - ரூபகதாளம்.

பல்லவி.

ஏனாதிநாதர்போலார்-பூதியைப்பற்றி
ஊனுருடலையிழந்தோர்.

அநுபல்லவி.

ஏனாதிநாதனார் ஈழக்குலச்சான்றார்
எயினனூரில்பத்தி யுடையவர்திருநீற்றில்.

சரணங்கள்.

அரசர்தமக்குவாள் வித்தையைப்பயிற்றி
வருபொருள்முழுமையும் அரனடியார்க்கீவர்
அரியஇவ்வித்தையைப் பயிற்றலில்அவரோடு
ஒருவன்தாயபாகம் பெற்றவதிசூரன். ௧.

தனக்குவருவழியும் தான்குறைந்ததென்று
இனத்தோர்சேனையோடுஇவனாட்போர்க்கழைத்து
கனத்தபோர்ச்செய்ததிசூரன்றானே தோற்று
மனக்குறைபெய்தவன் மறுபடித்தனியே. ௨.

போர்ச்செய்யக்கூப்பிட்டுப் பூதியணிந்தவன்
போகபத்தரெதிர் பரனடியாரென்று
சீர்பூதியணிந்தோன் உள்ளக்குறிப்பின்வழி
சிந்தித்துநிற்கவே சூரன்கொன்றிவனை. ௩.

வீசும்புகழ்ப்பெற்ற கேசவன்போற்றிடும்
விமலன்பார்வதியோடு மிடபாரூடராய்
நேசரேனாதி நாதநாயனாருக்கு
நெருங்கித்தோன்றிசிவன் திருவடிசேர்த்தார். ௪.

## கண்ணப்பநாயனார்.

இராகம்-மோஹனம் - ஏகதாளம்.

பல்லவி.

புண்ணீரொடப்பரன் கண்ணிற்றக்கண்ணப்பும்
புண்ணியர்புவியிலுண்டோ.

அநுபல்லவி.

கண்ணப்பரோவேடர்க் கதிபதியுடுப்பூரில்
கணவேந்தநாகன்சேய் திண்ணர்கண்ணப்பனார்.

சரணங்கள்.

ஒருநாள்திண்ணர்வனஞ் சென்றுப்வேட்டையில்
ஒருபன்றிவலையறும் படியெழுந்தேயது
ஒருவழியோடப்பின் திண்ணர்தொடர்ந்துவாள்
உருவிக்குத்தினார் பன்றியை
இருதுண்டமாகியே இறந்துகிடந்ததை
இருவர்நாணன்காடன் தொடர்ந்தவர்கண்டையே
அருந்துவீர்நெடுந்தூரம் வருந்திநடந்தீரென
அருந்தச்சலமெங்கென்ன. க.

திருக்காளத்தீச்சுரர் மலையைக்கண்டங்கொரு
பெரியவாறிருக்குது பொன்முகலியென
இருவரும்பன்றியை யெடுத்துவாருமெதிர்
இருக்குமலைக்குப்போவோம்

விளைத்துவாருமென்று திண்ணனார்செல்லநாணனீ
இருக்குதிம்மலையில் குடுமித்தேவர்நாங்கள்
வழிக்கும்பிடலாம்போய் எனத்திண்ணனொல்யாரம்
இப்போகுறைநின்றதென்றே. ௨

குருமரநீழலில் ஆற்றங்கரைதனில்
இடுவித்துப்பன்றியை நெருப்பேபுண்டாக்கென்று
தரிசனஞ்செய்திப்போ வருவோமென்றுநாணன்
தொடர்ந்தேறினார்திண்ணனார்
திருமலைமேயபிசிவ லிங்கங்கண்டபோதே
பரமனருட்பார்வை பெற்றுப்பிரிந்ததாய்
அருங்குழந்தையைக்கண்டு தழுவியழுவதுபோல்
அலிங்குத்தயிட்டழுதார்.

ஒருதுணையில்லாமல் வேடர்போற்றனியே
இருப்பதேதுதுட்ட மிருகமிருக்குங்காட்டிலும்
திருமுடிதனில்நீரை வார்த்துப்பச்சிலைபூ
தரித்தவராரோவென்றார்
அருகிலிருக்குநாணன் ஐயேஉன்தந்தையோ
டொருகால்வரவப்போது ஒருவேதியன்வந்து
திருமுடியில்நீர்வார்த்துப் பூப்போட்டுப்பேசிப்பின்
தன்னூணைவைபூட்டினான். ௩

திருக்காளத்தீசர்க்குப் பிரியமிதுதானென்று
இறைச்சிகொண்டுவரப் பிரிந்தழுதிருப்பி

பிரிந்துகாய்ச்சினபன்றி இறைச்சிமென்றுபார்த்து
உருசியுள்ளதையெடுத்து
ஒருகல்லையில்வைத்து ஒருகையிலேகொண்டு
மருமலர்கொய்துதன் தலைமயிரில்சொருகி
ஒருகையில்வில்லொடு வாயில்நீர்முகந்து
விரைந்தோடிவந்துதிண்ணனார். ௭

திருமுடிமேலே இருந்தபூக்களைத்தம்
செருப்புக்காலால்மாற்றி உமிழ்ந்தன் போட்டை
திருமுடிமேலே செருகும்பூவைவைத்து
திருமுன்னிறைச்சிபடைத்தார்
திருவமுதுசெய்த பிறகுஇரவினில்
மிருகங்கள்சுவாமிக்குத் துன்பஞ்செய்யாமலே
இருகண்ணிமையாமல் எந்தைபக்கத்தினில்
இருந்தார்ஜாகருகமாய். ௮

திருவமுதுசெய்ய திண்ணனுரும்மை
சுறையில்இறைச்சிகொண்டுவரும்பொருட்டேக
அருளேயுருவெடுத்த சிவகோசரிமுனி
அருச்சிக்கவந்துஅங்கே
திருமுன்னிறைச்சியு மெலும்புங்கிடக்கக்கண்டு
வருந்திக்குதித்தோடித் திருவுளமிசைந்திரோ
வரவேடுவரொன்று அழுதுமுழுகிசம்
புரோக்ஷித்துப்பூசைசெய்து.

அருந்தவமுனிசெல்ல இறைச்சியோடுதிண்ணர்
விரைந்துவந்துநீர் உமிழ்ந்துமுடியிலே
திருமுன்படைத்ததை தின்னுந்தித்திக்குது
தேனுங்கலந்தேனென்றார்
வருந்தித்தந்தைதாயும் அறிந்துஅழைத்துப்பின்
வசிக்காதுதிண்ணனை விட்டுத்திரும்பினர்
அருந்தவமுனிவரும் அனுசிதம்சகியாது
அனுதினமருளைவேண்டி.

இரவிலந்தநாள் சிவகோசரியார்க்கு
இறைவன்தோன்றியவன் வேடுவனென்று
உருவறமேல்வைக்கும் அன்புஉருவமே
ஒளித்திருகாண்பாயென
அருளைத்துதித்துமுனி மறுநாளருச்சித்து
அங்கொளித்திருக்கும்போ தன்புருவம்வழி
வரும்போதிறைச்சிகொண்டு துற்சகுனங்கண்டு
உதிரங்காட்டுகின்றதென்றே. ௩.

வரவையன்வலக்கண்ணில் உதிரமொழுகக்கண்டு
விழுந்துபுரண்டழுது எழுந்துதுடைத்தும்பின்
சொரிதலைக்கண்டவர் தீங்குசெய்தாரென்று
மருந்திலைபிழிந்தும்பின்னும்
அருவிபோல்சொரிய ஊனுக்குஊனிடல்
அவர்க்குத்தோன்றிகண்ணைப்பிடுங்கிச்சுவாமிகண்ணில்

லப்படநிரநின்று ஆனந்தங்கொண்டன்பர்
ஐயனிடைக்கண்சொரிய. ௧௦.

மாருந்திருக்குதென்று மற்றொருகண்ணையும்
செருப்புக்காலாலயன் கண்ணினிலூன்றி
விருப்பத்தோடுதோண்ட வைக்கும்போதப்பை
கருணாநிதிகைப்பிடித்தே
அரியகண்ணப்பா நிற்கநிற்கவென்று
அருளியண்டர்முனிவர் ஆச்சரியமடைந்து
மருமலர்மாரிபெய்து மகிழ்ந்துகேசவன்றுதி
அரன்வலப்பக்கநின்றார். ௧௧.

---

## குங்குலியக்கலயநாயனார்.

இராகம் - செஞ்சுருட்டி - ஆதிதாளம்.

பல்லவி.

குங்குலியதூபம் நங்கலயரிட்டார்
மங்கலியம்விற்றே.

சரணங்கள்.

குங்குலியக்கலயர் தங்குகடவூரில்
திங்களணிந்தோர்க்கு தினமிடதூபம்.

அருவினல்மறையோர் வறுமையெய்துமந்த
திருப்பணிசெய்தார் தாலிநெற்கொளவென்று. ௨

மனைவிமக்கள்வீட்டில் மடிவதைப்பசியால்
கனகமுதல்யாவும் கடவுளறிந்தருளி. ௩.

பாலமுதமுண்ணப் போசவன்பரில்லம்
பரமன்தோன்றியருளி பத்தர்வியந்தருளை. ௪.

திருப்பனந்தாளிலே திருப்பச்சாய்ந்தலிங்கம்
நரபதிசதுரங்கம் வருத்தமுற்றிளைத்திட. ௫.

அன்பர்கலன்டத்திற் கயிறிட்டிழுக்கலிங்கம்
அன்பெனுங்கயிறால் அரனுநிமிர்ந்து. ௬.

அரசன்தரிசித்து அன்பரைப்புகழ்ந்து
திருப்பணியுஞ்செய்து திருக்கடவூரேகி. ௭.

அப்பர்சம்பந்தர்க்கும் அமுதுசெய்து அன்பர்
அருங்கேசவல்துதி அரன்பதமடைந்தார். ௮.

---

## மானக்கஞ்சாறநாயனார்.

இராகம் - உசேனி - ரூபகதாளம்.

பல்லவி.

கஞ்சாறூரிலே மானக் கஞ்சாறர்பெண்ணின்
கூந்தலரிதற் கஞ்சாறூரிலே.

அநுபல்லவி.

பஞ்சவடிக்காமென்றுவேடங்கொண்ட
பஞ்சாளனைக்கேட்டுப் பஞ்சமில்லையென்று.

சரணங்கள்.

பூரசரிடத்திற்சேனைக் கதிபதிதொழிலேபுரியும்
பரம்பரைவேளாளரோதாம் பரமன்பத்தியிற்சிறந்து.க

மகப்பேறின்றிச்சிவனைத் துதித்துத்தவத்தாலுதித்த
மகளைக்கலிக்காமருக்கு மணஞ்செய்போதுபரமன்.உ

மாவிரதியர்போல்வந்து மகளின்கூந்தலைக்கேட்க
சேவித்துக்கூந்தலையரிந்து சிவனார்கையில்நீட்ட. ௩.

விரதியர்வடிவையொழித்து உமையோடிடபாரூடரா
பரன்தோன்றிக்குழல்பெற்றுப் பெண்கலிக்கா [ய்
[மனாமணந்து. ச.

நேசரும்பரவசமாகி நமஸ்கரித்தஞ்சலிசெய்து
கேசவன்போற்றிடுமீசன்குஞ்சிதபதத்தையடைந்தார்.

---

## அரிவாட்டாயநாயனார்.

இராகம் - தோடி - ஆதிதாளம்.

பல்லவி.

தன்னதுகழுத்தையே தாயனாரிந்தாப்போல்
இன்னமுமொருபத்தர் இப்படியுண்டோ.

அநுபல்லவி.

மன்னவன்போற்செல்வ முள்ளவரோகண
மங்கலவேளாளர் அங்கமேசிவபத்தி.

## சரணங்கள்.

சிவனுக்குத்தினந்தோறும் செந்நெலரிசியும்
செங்கீரையும்மா வடுவோடமுதுசெய்ய
அவனருளாற்செல்வம் அகன்றல்பர்கூலிக்கு
அறுத்துப்பெற்றசெந்நெலனைத்தும்படைத்தார்கு.

கார்நெல்லைக்கொண்டுதாம் சிவனுஞ்செய்திட
கடவுளருளினால் வயலெல்லாஞ்செந்நெல்லாய்
கார்குழல்மனைவியர் கொய்திலைக்கறிவிட்டில்
கடும்பசிதணித்திட இலைக்கறியும்மாள. ௨

ஆவிபோகாதவர் தேவியர்நீர்வார்த்து
அன்பர்செந்நெலமு தாற்குக்கொண்டுபோக
தாவிப்பசியினால் தள்ளாடிவீழவே
தற்பரற்கமுதெல்லாம் கமர்தனிலேசிந்தி. ௩

தாயனார் துக்கித்துக் கடவுளமுதுசெயத்
தான்பெறவில்லையென்று தமதரிவாளினால்
பாயத்தம்மெட்டியை யரியத்தொடங்கும்போது
பரனேசித்தசித்துப் பிரபஞ்சமுமாதலால். ௪

கமரில்நின்றுதிருக் கரமெழும்பியன்பர்
கையைப்பிடித்துமா வடுவொலியுந்தோன்றி
தமதுமனைவியோடு கேசவன்போற்றிடும்
தற்பரன்பதம்பெற்ற அரிவாட்டாயரே. ௫

## ஆனாயநாயனார்.

இராகம் - முகாரி - அடதாளம்.

பல்லவி.

அரன்புகழ்தனைப்பாடு-அவரை-விரவில்வலையிற்போடு.

அநுபல்லவி.

அருமையாகப்பஞ்ச அக்கரகீதத்தை
ஆனாயர்குழலில் அமைத்துப்பாடியபோல்.

சரணங்கள்.

மழநாட்டதனிலே - ஆனாயர் - மங்கலநகர்தனிலே
குழலில்பஞ்சாக்ஷரம் பொருந்தவேவாசித்து
கோநிரைகளைக்காட்டில் மேய்த்தசிவபத்தர். க.

பரமசிவனைப்போல - நின்ற - ஒருபூங்கொன்றைகண்டு
உருகியன்பினாலே விதிப்படிவாசிக்க
உருகினசராசரம் வேய்ங்குழலிசைகேட்டு. உ.

பரமசிவனுங்கேட்டென் - தாயார் - பார்வதிதேவியோ
உருகிவலையிற்பட்டுக் கேசவன்போற்றிடும் [டும்
திருக்கைலையிலென்றும் ஊதவருளிச்சென்றார். ௩.

## மூர்த்திநாயனார்.

இராகம் - பிலகரி - திரிபுடைதாளம்.

பல்லவி.

எ லும்புதேயமூர்த்தியர் வலித்துந்தேய்த்தார்
தம்முழங்கைகையை.

அநுபல்லவி.

உலகிலசிவபத்தியேபோர் உருவமாகியவதரித்து.

சரணங்கள்.

மதுரையில்வணிகர்மூர்த்திநிதமெந்தன் சொக்கேசருக்
கதிபெறச்சந்தனக்காப் பதனைக்கொடுத்துவர. [மு

சமணமதக்கருடை தேசராஜன் பாண்டியனை [மு 1.
சமரில்வென்றமூர்த்தியைச் சயனம்புகவருத்திடச்

சந்தனக்கட்டைகிடைக்காத்தந்திரஞ்செய்தந்தராஜன்
இந்தபத்தர்முழங்கையைஇட்டுககலில்தேய்த்திடவே.

இடுக்கண்செய்தராஜனின்றே இறந்துநீயேயரசாண்டு
மையேமைநீக்கிக்கைகல கடுகில்வாவருளிச்சொக்கர். உ.

அன்பர்கையைப்பெற்றமுன்போல் அரசனுமன்றே
[இறந்த
மன்னவன்சேயற்றுமாதங்கம்விட்டுமூர்த்தியை. மு.

அரசராகக்கொண்டுபோக அவர்சடையேமுடிதரித்து
அரசியற்றியச்சமணை அழித்துச்சைவந்தனைவிளக்கி. ௬

ஆசையற்றுப்பெண்களில்மீதணிந்தபூதிருத்திராக்ஷம்
கேசவனிதம்போற்று மீசன்பதமடைந்துசென்றார். ௭

## முருகநாயனார்.

இராகம் - பியாகடை - ஆதிதாளம்.

பல்லவி.

முருகநாயனாரென்போர் திருப்புகலூர் மறையோர்
பரமன்பத்தியிற்சிறந்தோர்.

சரணங்கள்.

முருகருதயத்துக்கு முன்னம்ஸ்நானஞ்செய்து
மருமலர்கொய்துநிதம் மாலைகள்செய்துஅங்கு. க.

பரமசிவன்றனக்கு வர்த்தமானீச்சரத்தில்
அருச்சனைசெய்தஞ்சு அக்கரமுஞ்செபித்தோர். உ.

திருஞானசம்பந்தர்க் கருஞ்சினேகிதராகிய
பெருமையும்பெற்றவர் பெருமணந்தனிலே. ௩.

நேசமோடவர்செய்த பூசாபலத்தினாலே
கேசவன்போற்றிடும் ஈசன்பதமடைந்தார். ௪.

## உருத்திரபசுபதி நாயனார்.

இராகம் - நாதநாமக்கிரியை - ஆதிதாளம்.

பல்லவி.

உருத்திரபசுபதியே - வேதியர்
திருத்தலையெனும்பதியே.

அநுபல்லவி.

பரமசிவனது திருவடிகளிலே
பதிந்தஅன்பேதம் பெருஞ்செல்வமென்ற.

சரணங்கள்.

தாமரைவாவியில் கழுத்தளவினில்நின்று
தற்பரன்திருவடி தனைமறவாமல். க.

வேதசாரமாம் உருத்திரமோதித்தாம்
உவந்துகேசவன் துதி சிவபதமடைந்தார். உ.

---

## திருநாளைப்போவார் நாயனார்.

இராகம்-கல்யாணி- ரூபகதாளம்.

பல்லவி.

திருநாளைப்போ வாரே - போல்
அருமைத்தொண்டர்யாரே.

### அநுபல்லவி.

அருமையாகமேற்கா நாட்டிலாதனூரில்
ஒருபுலையர்நந்தர் பரனடிமறவாதார்.

### சரணங்கள்.

இருப்பத்தோருசிவத் தலங்களுக்குவேண்டும்
வாருந்தோலுமீவர் வாத்தியங்களுக்கு
திருப்புன்கூரீசனைத் தரிசிக்கவேண்டிநேரே
திருநந்திதேவரும் விலகிக்காட்சிபெற்ற. ௧.

திருப்புன்கூர்தனி லொருபள்ளத்தைக்கண்டு
திருக்குளமாய்வெட்டித் திருப்பணிசெய்தெங்கும்
ஒருநாள்சிதம்பரந் தரிசிக்கவேண்டிப்புலை
யரும்போகயோக்கியதை யிலையென்றுதுக்கித்தே.

நாளைப்போவேனென்று நாள்கள்கழித்ததிரு
நாளைப்போவாரொரு நாள்தில்லைசென்றான்
நாளைத்தரிசிக்கத் தம்மதிழிபிறப்பு
தடைசெய்ததேயென்று துக்கித்துத்தூங்கவே.

கனகசபாபதி கனவினிற்றோன்றியக்
கினிக்குழிமூழ்கித்தம் சபைக்குவரவருளி
அனைவரந்தணர்க்கும் ஆஞ்ஞாபித்தேயவர்
அக்கினிவளர்த்ததில் மூழ்கிமுனிவராய். ௨.

கேசவன்போற்றிடுங் கனகசபைக்குச்சென்று
கண்டுகளித்துப்பிரமானந்தமடைந்து
ஆசையோடெல்லோருங் கண்டுக்காணமல்
ஐயன்ஸ்ரீபாதத்தை அருளிமறைந்தாரே. ரு.

## திருக்குறிப்புத்தொண்ட நாயனார்.

இராகம்-புன்னாகவராளி-ரூபகதாளம்.

கண்ணிகள்.

தொண்டமண்டலத்திலே காஞ்சிபுரத்திலே
தொண்டரோகாலியரோ - சிவன்
தொண்டர்குறிப்பறிந்து தொண்டுசெய்ததமையால்
திருக்குறிப்புத்தொண்டரே. க.

விருப்பத்தோடுசிவ பத்தர்கள்வத்திரம்
ஒலித்துக்கொடுத்துவருங்கால் - இவர்
கருத்தைவெளிப்படுத்த ஏகம்பரோஒரு
வறியவர்போலாகி. உ.

மாசடைந்தகந்தை மெலிந்தசிவபத்தர்
மேனிபிற்றொண்டர்கண்டு - மிக
ஆசையோடுசென்று உந்தக்கந்தையைத்தந்து
அருளும்ஒலிப்பேனென்ன. ௩.

வேடங்கொண்டகடவுள் வேறுகந்தையில்லை
வெளுத்தஸ்தமயனத்து - முன்

கூடமோகில்தா கொண்டுபோய்விரவினில்
கொண்டுவாருமென்றார். ரு.

திருக்குறிப்புத்தொண்ட ரடியேல்தாழாமல்
தருவேனென்றுசெல்ற - அதை
விருப்பத்தோடொலிக்கப் புகுந்தபோதருளினால்
பெருமழைபெய்ந்தடிக்க. ௬

அல்தமயனமு மாகவேதொண்டர்
அழுதுசலங்கிஜனையோ - சிவ
பத்தருக்குத்தீங்கு செய்தேனேயென்று
பாறையிற்சிரசைஎற்ற. ௭

பரமன்திருக்கரம் பாறைபக்கந்தோன்றி
பத்தனைப்பிடித்துக்கொண்டு - இவர்
பரமபத்தர்சீர் கேசவன்போற்றிடும்
பரமபதத்தையடைந்தார்.

---

## சண்டேசுர நாயனார்.

இராகம் - பைரவி - அடதாளம்.

பல்லவி.

சேய்ஞலூர்வேதிய ரெச்சதத்தரீன்ற
சேய்சண்டேசுராரமென்றும்.

## அநுபல்லவி.

செய்விசாரசருமரென் பெயர்பெற்றுப்பூரிலிக.
சன்மத்தறிவினாலே ஐந்துவயதிற்றனே.

## சரணங்கள்.

வேதமுதல்யாவுங் கற்பிக்காதுதாமே
உணர்ந்தறியுமறிவுண் டாயிற்று - வேதம்
ஓதுவிக்குமுபாத்தி யாயருக்குமனமே
உணர்ந்துபநயனமு மாயிற்றே. ௧.

ஒருநாளவ்வூர்ப்பசு நிரைகளிற்பசுவொன்றை
ஓட்டிமேய்க்குமிடையன் அடிக்கவே - விசார
சருமர்தடுத்தவனைத் தாமேநிரைமுமேய்க்க
கறவல்விசேஷித்தது மாயிற்றே. ௨.

மண்ணியாற்றங்கரையில் ஆத்திமரத்தின்கீழ்
மணலிலிங்கங்குவித்து மடிசுரந்த - பாலை
வண்ணக்குடநிறப்பி யபிடேகஞ்சிவபூசை
வேதியர்நிதஞ்செய்து பார்த்துப்பிதா. ௩.

தண்டினலடித்துப் பாற்குடத்தைக்காலால்
தள்ளியதையன்பர் நோக்கியே - அங்கு
கண்டகோலெடுக்க மழுவாகித்தந்தையின்
காலைத்துணித்துச்சிவ பூசைசெய்ய. ௪.

சேசவன்போற்றிடும் ஈசனுந்தோன்றியே
கண்டுகளித்தன்பர் தமக்கல்லோ - சண்
டேசுரபதமதைத் தந்தருளித்தந்தையும்
ஈசன்பதஞ்சேற்றத்தோ டெய்திறனே. ௫.

## திருநாவுக்கரசுநாயனார்.

இராகம் - உசேனி - ரூபகதாளம்.

பல்லவி.

பாழ்ச்சமணப்படுகுழியே வீழாதுயாத்திலேயே
வாழ்கப்பரன்வலியவாண்ட திருநாவுக்கரசே.

அநுபல்லவி.

தாழ்விலாததிருவாமூர் பதியதனில்வேளாளர்
தருமரிவர்க்குமருணீக்கி யாரெனவும்பதிதனிலே.

சரணங்கள்.

குறுக்கையர்குடிபுகழனாரும் குலமாதினியாரும்
கூடிமுணர்ந்திலகவதி பிறந்தபின்புபிறந்தார்
மருணீக்கிச்சமண்புகுந்து மயங்குந்துயர்நீங்கிடவே
அறிவிற்சிறந்ததமக்கைதானே அரனைவேண்டிடவே.

திருவதிகைவீரட்டான மெனுந்திவ்வியத்தலத்தின்
பரமனவர்பத்திக்கிரங்கி வரசூலைநோயும்
மருணீக்கியமணர்பாழியொழித்துத்தமக்கையிடத்தே
வரவவரும்பூதியணிய பெருநோயுந்தீர. ௨.

திருவதிகைத்தலந்தனிலே தேவாரம்பாடி
தீர்ந்துநோயுந்திருவருளே திருநாவுக்கரசென்று,
அரும்பெயர்பெற்றன்றுதொட்டு அரனடியாரயினை
அமணரறிந்து அவரைநீற்றறையிலடைத்தாரே. [சீத

அரவின்விஷமூட்டியும் ஆனைக்காலிலிடரச்செய்தும்
கருங்கல்லோடுபிணித்துக் கடலில்வீழ்த்தினரோ
கருங்கல்லேதெப்பமாகக் கொண்டுகடல்நீந்தி
கரையேறிப் *புலியூரில் அரன்தலங்கள்செய்தார்.

திருத்தூங்கானைமாடமெனுந்திவ்வியத்தலத்தில்
திருவருளால்திரிசூலம் ரிஷபத்துவஜக்குறியும்
தரித்தவராகியுஞ்சிவன்றன் தலங்கள்தரிசித்தே
அரவுதீண்டுமப்பூதிசேயைப் பதிகமோதிமாற்றி.

திருவீழிமிழலைதனில் படிக்காசும்பெற்று
திருப்பதிகமோதியே மறையடைப்புநீக்கி
திருக்கைலைதரிசிக்கத் தவழ்ந்துதேகந்தேய
திருவருளால் ஒருதடத்தில் மூழ்கித்திருவையாற்றில்

திருக்குளத்திலேயெழுந்து திருக்கைலைதரிசித்து
திருப்புகலூரெனுந்தலத்தில் திருப்பதிகமோதி
அரிந்தவக்கேசவனுந்தொழும் சிவலிங்கந்தனிலே
அடைந்துபதம் பெற்றவாழு மரசையென்றும்
[போற்றி. ௭

---

* திருப்பாதிரிப்புலியூர்.

## குலச்சிறைநாயனார்.

### இங்கிலீசுமெட்டு.

#### கண்ணிகள்.

மந்திரிநெடுமாற பாண்டியர்க்கேதாம்
மணமேற்குடிதனில் குலச்சிறையே
மந்திரபஞ்சாக் கரத்தையோதி
மறவார்பரமன் திருவடியே. ௧.

சிவனடியவர்கள் பத்தியிலேதாம்
சிறந்தவர்பாண்டி மாதேவி
அவரிடமேபோ மங்கையர்க்கரசே
அன்பொடுசெயுந்திருத் தொண்டுக்கே. ௨.

துணைசெய்கின்றவர் சமணையழித்தே
திருநீறெங்கும் வளர்ந்திடவே
வணங்கிடஞான சம்பந்தமூர்த்தி
வெல்றமணரைக் கழுவேற்றிவித்தே. ௩.

நேசமோடேசிவ பூசைசெய்தேதாம்
நேருதற்கரிய பதம்பெறவே
கேசவன்போற்றும் கைலைக்கேகி
நிசல்பதத்தை யடைந்தாரே. ௪.

# பெருமிழலைக்குறும்பநாயனார்.

## இங்கிலீசுமெட்டு.

### கண்ணிகள்.

பெருமிழலைப் பதிக்குறும்பர்
பரமன்பத்தி பரிந்தவர்
அரனடியார் சுந்தரமூர்த்தி
திருவடிகளைத் தியானித்தோர். ௧.

அஷிட்டசித்தி தனையடைந்து
அஞ்சக்கரத்தை ஜபித்தவர்
அஞ்சைக்களத்தில் சுந்தரமூர்த்தி
அரன்கைலை அடைவதை. ௨.

யோகபிரத்தியக்ஷத்தினால்
அறிந்துதாமு மவரையும்
போகப்பிரிந்து வாழேனென்று
யோகமுயர்ச்சி யாலேதாம். ௩.

தேசமோடு உடலினின்றும்
பிரிந்துநேர்ந்து சிவகிரி
கேசவன்தொழு மீசன்பதத்தைக்
கண்டுகளித்தாரென்றுமே. ௪.

## காரைக்காலம்மை.

### இராகம்-நீலாம்பரி-திரிபுடைதாளம்.

கண்ணிகள்.

காரைக்காலில்வணிகன் தனதத்தன்புத்திரி
காரைக்காலம்மை ஐயே. ௧.

புனிதவதியாரென்று பேரைக் கொண்டஇவர்
பரமதத்தனை மணந்தே. ௨.

பரமன்திருவடியைப் பலகாலுந்தியானித்து
அரனடியார்க் குதவி. ௩.

இல்லறப்வழுவாமல் இயற்றக்கணவனார்
இரண்டுமாங்கனி யனுப்பி. ௪.

ஒன்றைச்சிவனடி யார்க்குப்படைத்தே
சென்றதைக்கேட்டுப் பதி. ௫.

திருவருளாற்கனி வருகவதிசயித்து
தேசத்தைநீங்கிப் பதி. ௬.

பேய்வடிவம்பெற்று முடிநடையாலேறி
ஆயிகைலை யடைந்து. ௭.

அம்மையேயெனநாதன் அப்பாவென்றுபணிந்து
இம்மையேவேண்டாமென்று. ௮.

கேசவன்போற்றிடுங் குஞ்சிதபதநடம்
ஆசித்தானந்த மெய்து. ௩.

ஆலங்காட்டினில் ஐயன்புனிதநடம்
அநவரதம் போற்றும்.

## அப்பூதிநாயனார்.

இராகம்-அடாணா-அடதாளம்.

பல்லவி.

அரவுதீண்டியுஞ்சேயை அப்பூதிநாயனார்
மறைத்தப்பர்க் கமுதிடுவோர்.

அநுபல்லவி.

பிரமகுலத்தினர் திங்களூர்தனிலே
பாபமெல்லாநீங்கிப் புண்ணியமடைந்துந்தாக்கும்.

சரணங்கள்.

சிவபத்தியடியார் பத்தியிற்சிறந்தவர்
சிவனடியப்பர்தம் மகிமைகேள்வியுற்று
இவர்திருநாவுக் கரசெனவெல்லாம்
பெயரிட்டுத்தண்ணீர்ப் பந்தர்கள்வைத்திட. ௧.

அப்பருந்திங்களூர் அடைந்தேபந்தரில்
அவர்பெயரிருந்ததை அன்பனாக்கேட்டு
அப்பூதியென்று உன்பெயரெழுதாமல்
அவர்பெயரெழுதிய அதிசயம்யாதென. ௨.

அன்பர்கோபித்தே அமணரைச்சயித்த
அருந்தொண்டர்பேரன்றி மறுபெயருண்டோ
உன்பெயர்யாதென வமணப்படுகுழியில்
வீழாதாட்கொண்ட வப்பர்சிறியேனென. ௩

அப்பூதியளவிலா மகிழ்ச்சியையடைந்தே
அப்பரையமுதூட்ட அவர்சேயிலைகிள்ள
சர்ப்பந்தீண்டியச் சேயிறந்ததைமறைத்
தப்பர்க்கமுதூட்ட அழைத்துத்தந்தைதாய். ௪

அப்பரப்புத்திரர்க் கருளவிப்பூதியை
அழைக்கவப்பூதியும் அவனுதவானென
அப்பரறிந்தே அச்சிவத்தலஞ்சென்று
அவர்பதிகம்பாடி அச்சவமுயிர்பெற்று. ௫

அப்பரந்நேரம் அமுதுசெய்யாதற்கு
அன்பர்சிந்தைநொந்து அருந்தொண்டுசெய்து
செப்பருங்கேசவன் சேருஞ்சிவபதம்
சேர்ந்தனரப்பூதி நாயனாரென்றுமே. ௬

---

## திருநீலநக்கநாயனார்.

இராகம் - காம்போதி - ஆதிதாளம்.

பல்லவி.

சிலம்பிநின்மலன் மேனிதனிலே
வலிக்கப்பார் நீலநக்கர்.

சரணங்கள்.

பலர்துதிசாத்த மங்கைதனிலே
பிராமணகுலத்தினர் பரமசிவனையே
பலகாலருச்சித் தவரடிகளையே
பாலரூதாட்டும் பலபணிசெய்தே. ௧

ஆயவந்தீச்சுரர் ஆலயந்தனிலே
அருச்சிக்கும்வேளையில் அரனார்மேலே
விழுவோர்சிலம்பி மனைவியருதித்
துமிந்ததையருசித மெனப்பெண்டை நீத்தே. ௨

நித்திரைசெய்போது நாதருந்தோன்றி
நின்மனைவியருதித் துமிந்திடமன்றி
மற்றிடமெல்லாங் கொப்புளமென்றே
மேனியைக்காட்டிட மறையோர்மகிழ்ந்தே. ௩

மனைவியையழைத்து வீட்டையடைந்து
மகிழ்ச்சியோடிருக்கச் சம்பந்தமூர்த்தியை
அனைவருந்துதித்து அழைத்தமுதளித்து
அரும்பாணர்க்கிடம் அமைத்துவேதிகையே. ௪

நேசர்நீலநக்கர் தமைப்பதிகத்திலே
ஞானசம்பந்தர் சிறப்பித்துப்பாடி
கேசவன்போற்றிடும் ஈசன்பதத்திலே
கலந்தார்நல்லூர்ப் பெருமணந்தனிலே. ௫

# திருத்தொண்டர்புராணக்கீர்த்தனைகள்.

## நமிநந்தியடிகணாயனார்.

இராகம் - தன்யாசி - ஆதிதாளம்.

பல்லவி.

நமிநந்தியடிக ளொழியாதே - நிமலனை
நிமைப்போதும் மறவாதே.

அநுபல்லவி.

அமையுஞ்சிந்தையுடையோர் எமப்பேறூரில்சாதி
அந்தணர்பலநாளும் ஆரூர்க்குச்சென்றுஆதி.

சரணங்கள்.

அரனெறியென்னுமோர் ஆலயவிளக்கேற்ற
அருகிலமணர்வீட்டில் அறியாமல்நெய்கேட்க. க.

அவருங்கள்சிவன்கையில் அக்கினியேயிருக்க
அவர்க்குவிளக்குமிகை அன்றோஎனஏய்க்க. உ.

நீரைமுகந்தெரியும் நெய்யில்லைபோமென்று
நீர்விளக்கேற்றிநிதம் நிமலனருளியன்று. ௩.

சீர்தண்டியடிகளால் சமணர்நாசமடைந்து
ஆரூர்பெருமைகொண்டு அரசன்நிமிந்தஞ்செய்து. ௪.

ஒருநாள்வீதிவிடங்கப் பெருமானுற்சவம்பார்த்து
வருவோர்சகலராலு மாசௌசமென்றுறங்க. ௫.

திருவாரூரிற்பிறந்தோர் தங்கணமென்றருளி
திருத்தொண்டர்தரிசித்துத் திருவாரூர்குடிசென்று. ௬.

திருநாவுக்கரசினால் தொண்டர்க்காணிப் பொன்னென்
திருப்பதிகத்திற்பாடி தொண்டுகள்மிகச்செய்து. [று
அருங்கேசவன்தொழும் அம்பிகைபாகருள்ள
அரன்பதமெக்காலும் அடைந்தாரேசெல்றுநேரே. ௬

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

இராகம் - துஜாவந்தி - ஆதிதாளம்.

பல்லவி.

காழிதனிலேழிசை போடமுலையுண்
கௌணியர்கோனே.

அநுபல்லவி.

காழிநகரில்வாழும் சிவபாதவிருதயனென்
கௌணியவேதிய ரீன்றமூவாண்டினி
லழுதுலமையவளே கருதியேயூட்டும்.

சரணங்கள்.

ஞானசம்பந்தர்சிவத் தலங்களைத்தரிசித்துப் பாடவே
தாள்கரத்தைத்தட்டிதிருக்கோலக்காதனில்நோகவே
வானவர்துதியா னருளிப்பொற்றாளம் வாங்கியே-திரு
வரத்துறைதனிலே வருந்திநடந்ததை நோக்கியே
தானேதற்பரன்முத்துத் தண்டிகையருளியே
தொண்டரதிலேறிக் கொண்டிருந்தேயொரு
தொண்டர்முயலகநோய் தீர்த்தெழுந்தருளி. க

அரனடியார்கள் கோடையில்வருந்தலைப் பார்க்கவே
அரன்தண்ணீர்ப்பந்தர் வைக்கவும்பெற்றனுதியே
வருந்தப்பஞ்சம்வந்து வளர்கிழிபெற்றுப் போஷித்
[தே - திரு
மருகல்வணிகனை அரவுதீண்டியதைத் தீர்த்திட்டே
திருமறைக்காட்டினில் மறைக்கதவைமூடியே
தீண்டப்பாண்டியனை தீர்ந்ததுகூல்சுரம்
பாண்டியராஜன்முன் மாண்டிடச்சமணரே. உ

சமணர்சம்பந்தரு மரசன்முன்வாது கூறியே
அமணருமன்பரு மக்கினியாற்றிலிட்டேட்டையே
அமணரோடுவெந்து மாற்றிலடித்துக்கொண்டும் போ
[ணதே - நம
தன்பரேடக்கினி ஜயித்துமாறெதிர்க்கவு மானதே
அமணரொன்னாயிரவா அரசன்கழுவிலேற்றி
ஆண்டவனைப்பாடி தாண்டிநதிப்பெருக்கை
அடியரோடுதாழு மோடத்திலேறியே. ௩.

காரிடிதன்னைச் சாரிபுத்தன்தலை யேற்றியே
காயாப்பனைகள் கனிகொடுக்கவும் போற்றியே
ஈரமிலாவங்க மூயினையெய்த வேற்றியே - குரு
இலங்குமயிலைப் பூம்பாவையாக மாற்றியே
சீர்தந்தைவேண்டுதலால் திருமணஞ்செய்துநல்
லூர்ப்பெருமணத்தினில் உத்தமபத்தினிமற்றெல்
லோருடன்கேசவன் ஜோதி சுசனையடைந்தாரே. ௪.

## ஏயர்கோன்கலிக்காம நாயனார்.

இராகம் - பூகாரி - ஆதிதாளம்.

பல்லவி.

சோழராஜரிடத்தே-பரம்பரை-சேனைக்கதிபதியே.

அநுபல்லவி.

ஏயர்கோன்கலிக் காமநாயனார் என்பர்வேளாளரே.

சரணங்கள்.

திருப்புன்கூர்தனிமேல சிவத்தலத்
திருப்பணிமிகச்செய்தே
குருலிங்கசங்கம பத்தியிற்சிறந்தோர்
பரவையார்தம்மிடத்தே. ௧.

சுந்தரர்சிவன்றனையே சந்திக்குச்
செல்லவனுப்பிக்கேட்டு
வெந்துயர்கோபங் கொண்டதையன்பர்
சுந்தரருங்கேட்டு. ௨.

அறக்கறிவித்திடவே அவரும்
இருவரைக்கூட்டுதற்கு
திருவுளங்கொண்டு சூலைநோயேவ
தொண்டர்கலிக்காமர்க்கு. ௩.

தொண்டர்சிவனைத் துதித்தேநோயைத்
தீர்க்கவேணுமென்றே

தொண்டர்சுந்தரரா லன்றிஇல்லையும்
திரப்படாதென்றே. ௪.

வன்றொண்டர்வரு வதனைக்கேட்டு
வயிற்றைக்கிழித்துக்கொண்டே
தொண்டரிறந்ததைச் சுந்தரர்பார்த்துத்
தாமும்வாளெடுத்தார். ௫.

பரமனருளினாலே அப்போ
புத்தர்உயிர்த்தெழுந்து
இருவருங்கூடி நண்போடிருந்து
திருத்தொண்டுசெய்திருந்து. ௬.

நேசமோடு நிதமேஅன்பர்
பூசைசெய்துஇருந்து
கேசவன்போற்றிடு மீசன்பதத்தை
நேசித்தடைந்தாரே. ௭.

---

## திருமூலநாயனார்.

இராகம்-செஞ்சுருட்டி - ஆதிதாளம்.

பல்லவி.

திருமூலநாயனார் தமிழ் நாட்டே
திருமந்திரஞ்செய்ததிரு விளையாட்டே.

அநுபல்லவி.

பரமசிவகிரியில் ஒருசிவயோகி
குறுமுனிபொதிகைக்கே வருபவர்வழியில்.

சரணங்கள்.

காவிரியாற்றங் கரையின்புறவிலே
கண்டபசுக்கள் அழுதலைஎதிரே. ௧.

சாத்தனூர்மூலன் மேய்த்தஇடையனே
செத்திருக்கப்பசுக்கள் துயரத்தைநீக்கவே. ௨.

தம்மதுதேகத்தை பரனைசெய்துவைத்தே
அம்மூலனுக்குள்ளே புகத்துயர்நீக்கி. ௩.

தமதுசரீரத்தைத் தேடமறைந்தே
திருவருளேயென்று தெளிந்துதுதித்தே. ௪.

ஆவடுதுறையில் அரசின்கீழே
அமர்ந்துயோகஞ்செய்து ஆண்டுக்கோர்பாட்டாய்.

சைவாகமத்தை மூவாயிரமாய்
செய்துகேசவல்துதி சிவகிரியடைந்தார். ௫.

---

## தண்டியடிகணாயனார்.

இராகம் - பியாக் - ஆதிதாளம்.

பல்லவி.

திருவாரூரில் தண்டியடிகள் பிறவிக்குருடரே.

# திருத்தொண்டர்புராணக்கீர்த்தனைகள்.

## அநுபல்லவி.

அருமையகக்கண் கொண்டாரனைக்கண்
டல்லும்பகலும் துதித்தாரே.

## சரணங்கள்.

அங்குளகோயிலைக் காலந்தோறும்
　அன்பாய்வலஞ்செய்தோர்
அருகிலிருக்கின்ற திருக்குளம்கரையிலும்
　தறிநட்டுக்கயிர்கட்டித் தடவியே.

கல்லும்போது சமணர்பொறாமை
　கொண்டவரையணைந்தே
கல்லில்பிராணிக ளிறந்துபோங்கண்கெட்டுங்
　காதுங்கேட்க வில்லையோ.

என்றவமணரை யன்பர்கலங்கி
　எங்கள்சிவனருளால்
உங்கள்கண்கள்கெட்டு எங்கண்ணைப்பெறுவேன்
　ஊரிலிரோமென்று உயுத்தமுமாய்.

அன்பரழுதிட அவர்க்குமரசர்க்கும்
　அரன்கனவினிலருளி
அன்பர்குளம்முழுகி கண்பெற்றரசர்முன்
　அமணர்கண்கெட்டு ஓடிப்போய்.

நேசனாவணங்கி யரசர்குளங்கட்டி
நெடுநாளிருந்தன்பர்
கேசவன்போற்றிடு மீசன்பதத்தை
ஆசையுற்றென்றும் எய்தாரே. ௭.

## மூர்க்க நாயனார்.

இராகம் - கனடா - ஆதிதாளம்.

பல்லவி.

தோர்க்காமல்சூதில் தேடும்பொருளிலே
மூர்க்கர்மகேசர பூசைசெய்.

அநுபல்லவி.

ஆர்தலடியார்திரு வேற்காட்டில்வேளாளர்
அன்பொடரனடியவர்க் கமுதுசெய்விப்பர்.

சரணங்கள்.

அடியாரனேகர் வருகின்றமையால்
அவர்தம்மிடத்திலுள்ள
அடிமைநிலம்விற்றும் அன்பொடுபூசை
அகலாதுசெய்துபின் வறுமையெய்து. ௧.

காமுனம்பயில்சூதிலேபொருள்
தேடநினைந்தவ்வூரில்

சேமமாயாடுவோ ரில்லாமைபற்றி
செல்றாரகன்று சிவஸ்தலந்தோறும். உ.

தரிசித்துக்கும்ப கோணமடைந்து
தோர்க்காதுகுதில் தேடும்
பொருளில்மகேசுர பூசைசெய்துகுதில்
மறுத்தவரைஉடைவாளுருவிக்குத்தி. ௩.

சேசர்நற்குதர் மூர்க்கரொனும்பெயர்
நேரிட்டிந்தியதியை முடித்து
கேசவன்போற்றிடும் ஈசன்பாதம
கேசுரபூசையால் எய்தனரென்றும். ௪.

---

## சோமாசிமாற நாயனார்.

இராகம் - ஸ்ரீராகம் - ஆதிதாளம்.

பல்லவி.

திருவம்பரிலே பிரம்மகுலத்திலே
திருத்தொண்டு சோமாசிமாறர்.

சரணங்கள்.

பரமசிவனது பஞ்சாக்ஷரத்தை
பத்தியோடு ஜபித்தல் நித்தியநியமமென
பகர்ந்தோரோஇவர் எப்போதும்
பாரினில்யாகமும் பிரீதியாய்ச்செய்தோர். க.

ஆரணடியவர்களை அமுதுசெய்விப்பவர்
திருவாரூர்ச்சென்று தொண்டர்சுந்தரர்தம்
திருவடிபூசித்து வருந்தாதே
சீர்கேசவன்றுதி சிவபதம்பெற்றார். ௫.

## சாக்கிய நாயனார்.

இராகம் - ஆகிரி - அடதாளம்.

பல்லவி.

சாக்கியர்போலும் லிங்கத்தைக்கல்லால்
தாக்கினருண்டோ.

அநுபல்லவி.

பாக்கியவேளாளர் திருச்சங்கமங்கையில்
பௌத்தம்பிரவேசித்துப் பலசமயமிகழ்ந்து.

சரணங்கள்.

பரமசிவனேபதி பகர்சைவமெய்யென்றாய்
திருவடியெக்காலுந் தியானிப்பாராயினர். ௧.

போசனஞ்செய்யுமுன் சிவலிங்கமேற்கல்லை
பிரியமாய்த்தெரியாமல் போட்டுப்பூசித்திட. ௨.

ஒருநாளருளினால் மறந்துபுசிக்கப்புக
மறுபடியும்நினைத்து விரைந்தல்பாலெறிந்திட. ௩.

கேசவன்போற்றிடும் ஈசன்பத்தியிற்பட்டு
நேசர்க்குத்தோன்றிக்கை லாசமருளினார். ௪.

## சிறப்புலி நாயனார்.

இராகம் - சாவேரி - ரூபகதாளம்.

பல்லவி.

பத்தர்சிறப்புலியார் பிரம்மகுலத்தர் திருவாக்கூரில்.

சரணங்கள்.

பத்தியாய்ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை
பாரில்ஜபித்த வேதியர். க.

சிவனடியாரை நமஸ்கரித்து
சுவையோடமுது செய்வித்து. உ.

பரமசிவனைக் குறித்துயாகம்
பலவுஞ்செய்து கொண்டிருந்து. ௩.

கேசவன்தொழு மீசன்பாதம்
கண்டுகளித்தா ரென்றுமே. ௪.

---

## சிறுத்தொண்டநாயனார்.

இராகம் - செஞ்சுருட்டி - ரூபகதாளம்.

பல்லவி.

சிறுத்தொண்டர்போலிடச் சித்தங்கொண்டோம்
பெறுமோர் புதல்வனையே.

அநுபல்லவி.

அறத்துப்பத்திபண்ணும் அன்பருமுண்டோ.
ஐயோஐயோ பொய்யோபுவியில்.

சரணங்கள்.

திருச்செங்காட்டங்குடி ஆமாத்தியர்குலம்
சிறுத்தொண்டர் பரஞ்சோதியார்
பரன்திருவடிகளைப் பலகாலுந்தியானித்து
பத்தர்க்கமுதூட்டுவார்
அரசர்க்கனுக்காகி யானைசெலுத்திச்சென்று
அரசர்பலரைவென்று
இரத்தினநிதிக்குவை யாவுங்கொண்டுவந்து
ஈசர்க்கல்பமொன்று ராஜனும்பூசித்த. க.

பரமசிவன்தொண்டர் பத்திக்கருள்செய்ய
வைரவவேடங்கொண்டு
சிறுத்தொண்டர்சிவனடி யரைத்தேடிக்காணுமடல்
சிறந்தவைரவரைக்கண்டு
திருவாத்திமரத்தின்கீழ் கணபதீச்சரத்தில்
திருவமுதுக்கழைத்து
ஒருநரபசுவைத்து வயதுஐந்துண்ணுநாள்
உம்மாலதுசெய்ய ஆகாதேனன்று.

தொண்டர்செய்வேனென்று தொழுதுவிரைந்து சென்று
திருவெண்காட்டுநங்கை [ஸ்ஷு

பெண்பேம்மகிழ்ந்தொரோ புதல்வர்சீராளனை
பிடித்துத்தாய்த்தந்தை கொய்து
உண்டார்க்குருசியாய்ப் பாகஞ்செய்துவேண்ட
வைரவர்தனியே உண்ணேம்
தொண்டர்வேண்டுஞ்சிறுத் தொண்டரோஉடைவிட
த்தொண்டர்வேறிலைபசி யென்றேஇசைந்து. ௫

உம்முடன் உண்ணற்குப் புத்திரன்உண்டேல்
ஊட்ட அழையுமென்றார்
நம்மிடபுத்திரன் இப்போதுதவா
னென்றுசொலத்தொண்டர்
அம்மைதன்வாராமல் உண்ணேத்தேடி
அழையுமழையுமென்றார்
அம்மைநங்கையாருந் தொண்டரும்போய்க்கூவ
அருகில்சீராளர் ஓடிவர. ௬

தாயாரெடுத்துத் தழுவிமகிழ்ந்து
தொண்டர்கையிற்கொடுக்க
நேயர்வைரவனைக் காணுதிகைக்க
நேசன்கேசவன்தொழும்
ஈசனிடபா ரூடராய்த்தோன்றி
இம்மூவர்தாதியரும்
காசினியோர்கள் கண்டுகளித்திட
காட்சியைப்பெற்றுக் கைலைசென்ற

## சேரமான்பெருமாணாயனார்.

இராகம்-தர்பார்-ஆதிதாளம்.

பல்லவி.

மகோதைமலைநாட்டில் சேரர்குடியில்
மகிபன்பெருமாக்கோதை.

அநுபல்லவி.

பகவனருளினால் பாலியதசையிலே
பத்திவைராக்கியத்தில் உத்தமமுடையவர்.

சரணங்கள்.

ஈசன்திருவடிகளை அண்டநல்வேண்டுமென
அரசர்க்குரியதொழில் வினைத்துமிகழ்ந்தே
திருவஞ்சைக்களமெனுந் திவ்வியஸ்தலத்தினில்
திருத்தொண்டுநெறிநேராறுஞ் செய்வாராயினார். ௧.

செங்கோற்பொறையன் சேரமகாராஜன்
ஜகத்தைவிட்டுநீங்கித் தவத்திற்குச்செல்ல
அங்குளமந்திரிகள் அம்பலாவேண்ட
அவரருள்விடைபெற்று அரசுக்குடம்பட்ட. ௨.

ஆசியற்றவன்பர் யானைமீதிற்செல்ல
அங்கொருவண்ணான் உவர்மண்வெளுத்துச் செல்ல
அரனடியாரென்றன்பர் அவனடியில்வீழ
அவனடிவண்ணான் இவரடிச்சேரனென்ற.

மனுநீதிநெறியை நடத்தியரசர்கள்
    அனைவர்திறைகொணர அரசையியற்றி
தினதினசைவம் அபிவிர்த்தியாகி
    தில்லைச்சபாபதி திருச்சிலம்பொலிகேட்கும். ௪.

மதுரைச்சொக்கேசர் பாணர்க்குப்பொன்தர
    மகிபர்க்கோலைதந்து மகிழ்ந்தேஅளித்திட்ட
அதிபனுமோர்தினம் சிலம்பொலிகேளாமல்
    அவர்வாளையுருவி மார்பிலேநாட்ட. ௫.

கனகசபாபதி விரைந்தொலிகேட்பித்து
    முனம்வரத்தடைசுந் தரர்பதிகங்கேட்டு
எனவரசர்கனக சபையைவணங்கி
    இயற்றினர்பொன்வண்ணத் தந்தாதியங்கே. ௬.

திருவாரூர்ச்சென்று சுந்தரரைக்கண்டு
    திருமும்மணிக்கோவை வன்மீகர்க்குப்பாடி
அரசருந்தொண்டரும் அகன்றூரை
    அடைந்துவேதாரணியம் அரசாந்தாதியாடி. ௭.

மதுரைமுதலிய ஸ்தலங்களைவணங்கி
    மகிபனுந்தொண்டருங் கொடுங்கோளூரடைந்து
அதிபரொருநாள் ஸ்நானம்பண்ணும்போது
    அரனனுப்பினவெள்ளை யானைமீதிற்செல்லும். ௮.

சுந்தரர்சேரனை நினைத்துக்கொண்டுபோக
    செயலையறிந்தரசர் குதிரையிலேறி

மந்திரபஞ்சாக்ஷர மோதிகுதிரைக்கு
சுந்தரர்யானையை வலஞ்செய்துமுன்சென்று. கூ.

சுந்தரர்சிவகிரி சென்றுநமஸ்கரித்து
சேரர்தமுடன் சிவனருள்விடைபெற்று
அம்பரங்குமுலா கேசவல்போற்றிடும்
ஆரணிடத்தேபாடி அவர்கணநாதரானார். ௧0.

## கணநாதநாயனார்.

இராகம்-நாதநாமக்கிரியை-ரூபகதாளம்.

பல்லவி.

சீர்காழிநன்னிமேல் வேதியர்குலத்தவர்
சிறந்தசிவபத்தர் சிவகணநாதனார்.

சரணங்கள்.

திருத்தோணியப்பர்க்குத் திருட்பணிசெய்பவர்
விரும்பிவந்தவர்க்குத் திருத்தொண்டுகேற்பிப்பர். க.

கிரகஸ்தாச்சிரமத்திருந் தரனடியார்களை
விருப்பமுற்றுநிதம் வழிபடுந்திருத்தொண்டர். உ.

சமயகுரவர்ஞான சம்பந்தரைத்தினம்
பலமேகப்பூசித்துப் பத்திகள்மிகச்செய்து. ௩.

பூசாபலத்தினால் கேசவல் போற்றிடும்
[illegible] ௪.

## கூற்றுவநாயனார்.

இராகம் - தோடி - ஆதிதாளம்.

பல்லவி.

பஞ்சாக்ஷரத்தை யோதியென்றும்
பரமசிவத்தைப் பணியுங்கூற்றுவர்.

அநுபல்லவி.

அஞ்சிசிவகாம வல்லிமணவாளரி
குஞ்சிதபதமுடிக் களந்தைவேந்தர்.

சரணங்கள்.

அரனடியார்க்குத் திருத்தொண்டுசெய்பவர்
அருள்வலியினால் ஐசுவரியமடைந்து. ௧.

அரசர்பலர்களைப் போர்தனில்வென்று
அவர்களினாடுகள் அனைத்துங்கவர்ந்து. ௨.

தில்லைவாழந்தணர் தம்மைவேண்ட
திருமுடியினைதாம் சூட்டோமென்ன. ௩.

கூற்றுவர்கலங்கித் திருவடிமுடியை
கேட்கச்சொப்பனத்தில் கடவுளருளி. ௪.

நேசமோடாண்டு திருப்பணிசெய்து
சேசவன்போற்றும் நகரையடைந்தார். ௫.

## பொய்யடிமையில்லாத புலவர்.

இராகம்-கல்யாணி-ஆதிதாளம்.

பல்லவி.

பாண்டிநாட்டிற்சிறந்து விளங்குந்துவாதசாந்த
புரமதுரா புரியிலே.

அநுபல்லவி.

ஆண்டகுருசொக்கேசர் அருகிற்சதுரமாய்
இரண்டுசாணளவின தாகிமெய்ப்புலவர்க்கு.

சரணங்கள்.

முழும்வளர்ந்திருத்தற்கு இடங்கொடுக்கின்றசங்கப்
பலகையைப்பெற்றதனில் இருந்துதமிழ்மொழியை
வளர்த்தகடைச்சங்கப் புலவர்கபிலர்முதல்
உளமாய்நாற்பத்தொன்பதின்மர்மெய்ப்புலவர்கள்.

உருத்திராக்ஷம்விபூதி தாரணர்களாய்பஞ்சாக்
கரஜபபரர்களாகி அகத்தியம்தொல்காப்பியம்
பாவுமிலக்கணப் படிஆசுமதுரஞ்சித்
திரம்வித்தாரமென்னும் அரியநாற்கவிகளால். உ.

பரமசிவனைமெய்யாய்ப் பத்தியோடுபாடி
பொய்யடிமையில்லாப் புலவரெனப்பேர்பெற்று
கருணாகரனருளால் கேசவன்போற்றுஞ்சொக்
கேசர்பதமடைந்த கடைச்சங்கப்புலவர்கள். ௩.

## புகழ்ச்சோழநாயனார்.

இராகம் - பியாக் - ஆதிதாளம்.

பல்லவி.

சோழநாட்டிலே உறையூரிற்புகழ்ச் சோழநாயனாரோ
வாழுநாளில்மற் றரசர்கள்பணிய வரசியற்றி னாரோ.

சரணங்கள்.

ஆலயங்களெல் லாவற்றினுமே
அரனார்க்குவேண்டும்
பாலமுதோடு நித்தியநைமித்திகம்
படைத்தாரோவென்றும். ௧.

சிவனடியாருக்கு வேண்டுவனவெலாஞ்
சிறப்பாய்க்கொடுப்பாரோ
பவத்தினைப்போக்குஞ் சைவமெங்குமே
பரவச்செய்தாரோ. ௨.

சிவகாமியாண்டார் புஷ்பத்தையானை
சிதறியதென்றே
சிவனடிஎறிபத்தர் யானைப்பாகரையுஞ்
சேதித்தாரென்றே.

எறிபத்தநாயனார் தம்மைவணங்கி
என்னையுங்கொல்லுமென்றே

அறிவுளவரசருந் தமதூர்வானைக்கொடுத்
தருகினுண்டின்றாரோ.

அதிகனென்றுமோ ராசன்மாத்திரம்
அரசர்க்குத்திறைகொணரா
ததையறிந்தவன் அரனைப்பொடிபடுத்தி
அனுப்பினைதலைகளிலே. ௫.

ஒருபுன்சடைத்தலை கண்டேயரசரும்
உள்ளநடுங்கிக்கலங்கி
பெரும்பாதகமென்று புத்திரர்க்கரசேற்றி
புன்சடைத்தலைதாங்கி. ௬.

அக்கினிவலம்வந்து கேசவன்போற்றிடும்
அரன்திருவடிசேர
அருமைப்பஞ்சாக்ஷர மோதியதனுளே
அமர்ந்துசென்றாரோ. ௭.

## நரசிங்கமுனையரையநாயனார்.

இராகம் - ஆனந்தபைரவி - ரூபகதாளம்.

பல்லவி.

நரசிங்கமுனையரைய நாயனார்-என்றுமவர்
அரசியற்கையில் வெறுப்பேயாயினார்.

# திருத்தொண்டர்புராணக்கீர்த்தனைகள்.

## சரணங்கள்.

திருமுனைப்பாடி நாட்டில்அரசராய் - என்றுமவர்
பரமசிவன் பதமே பெறுவராய். ௧

சர்வான்மாக்களும் சைவமடையவே - என்றுமவர்
சத்ருமுனைகள் கடத்தல் விஜயமே. ௨

சைவநெறியைத் தழைக்கச்செய்துமே - என்றுமவர்
சிவனடியர்க்கு அமுது படைத்துமே. ௩

ஆலயங்கட்கு நித்தியநைமித்திகம் - என்றுமவர்
போலநடத்தினர் இல்லை இச்சகம். ௪

ஆதிரைதோறும் பூசை செய்பவர்-என்றுமவர்
அடியர்க்குநூறு பொன்னைக்கொடுப்பவர். ௫

தூர்த்தவேடமுள்ள ஒருவரோ என்றுமவர்
திருநீறணிந்த பேர்க்குக்கொடுப்பரே. ௬

வந்துபிறருங் கண்டே ஒதுங்கினார் என்றுமவர்
தந்திருநூறு பொல்லைவணங்கினார். ௭

கேசவன்தொழு தேற்று மீசனை என்றுமவர்
தேசித்துப்பத நீழல்நெருங்கினார். ௮

## அதிபத்த நாயனார்.

இராகம் - ஆம்போகி - ஆதிதாளம்.

பல்லவி.

அதிபத்தர்போ லெவரோ - பரதரில்
அதியத்தியா னவரோ.

அநுபல்லவி.

பதிநாளைப்பாடியில் நாகபட்டனந்தனில்
பரதவர்குலத்திலே தலைவருமாகியே.

சரணங்கள்.

பரதவர்வலைப்படுந் தலைமீன்தனை நிதம்
பரமசிவனுக்கென்று பத்தியாய்விடுவார்.

ஒருமீனேவரினும் விடவிடக்கடல்தனில்
ஒருமீனேவந்து வறுமையையடைந்தார்.

விலையில்லாதஒரு நவரத்தினஉறுப்புள்ள
பெருமீன்வந்தும் அதனைக்கடலில்விட:

பலருந்துதித்திடுங் கேசவன்போற்றிடும்
பரனுந்தோன்றியே பரகதியடைத்தார்.

## கலிக்கம்ப நாயனார்.

இராகம் - பியாக் - ஆதிதாளம்.

பல்லவி.

சோழமண்டலத்தோர் - கலிக்கம்பர்
போலுமுண்டோ பத்தர்.

அநுபல்லவி.

கோழிலாதபெண்ணாடகந்தனிலொரு
குலவைசியர்சிவனடியர்களைத்தொழும்.

சரணங்கள்.

ஆசையோடமுதை அளிப்பார் - தினம்
அவர்கள்வேண்டியதைக் கொடுப்பார் - பாத
பூசைசெய்யவே தொடுப்பார் - தம்
பணிவிடைக்காரனை அடுப்பார் - அப்போது

ஆசைமனைவியரும் அறிந்தே - திரு
அடிக்குநீர்வார்க்காத கரத்தை - வெட்டி
பூசைசெய்தவனைப் பணிந்தே - நிதம்
சேவல்போற்றிய பரத்தே-சென்ற. ௧

## கலியநாயனார்.

இராகம்-சாரங்கா - ஆதிதாளம்.

### பல்லவி.

தொண்டமண்டலத்தில் திருவொற்றியூர்தனில்
தொண்டர்கலியர்போ லுண்டோஜகத்தினில்.

### அநுபல்லவி.

கொண்டபெண்டைவிலை கூறிப்பேசிவிற்று
கோயில்திருவிளக் கேற்றிட்பணியும்.

### சரணங்கள்.

செக்கார்குலத்தினர் சக்கரப்பாடியில்
செல்வருமாகியே சிவபுண்ணியத்தி
மிக்கவிரும்பிச் சிவாலயந்தன்னில்
மிகுந்ததிருவிளக் கேற்றுமப்போதினில.

பத்திவலிமை பிறர்க்குப்புலப்பட
பரமனவரிட செல்வத்தைக்குறைத்திட
பத்தொன்னெணய்த்தனை வாங்கியேவிற்றிட
பின்தயிலவினை கூலிக்குஞ்செய்திட.

வந்திடுங்கூலியை திருவிளக்கேற்றி
வந்ததுங்கிடையாது முட்டவேசாற்றி
சொந்தமனைவியை விற்றிடப்போற்றி
சோர்ந்தவர்வாங்குவ ரில்லையாலேற்றி.

பாசத்தைவிட்டுக் கழுத்தைபரிந்தனர்
பரப்பிஅகல்களை இரத்தத்தைநிறைத்தற்கு
கேசவன்போற்றிடு பீசனுநேர்வந்து
கையைப்பிடித்துக் கைலைக்குச்சென்ற.

## சத்திநாயனார்.

இராகம்-யமுனாகல்யாணி-ரூபகதாளம்.

பல்லவி.

சத்திநாயனா ரென்றுசிவ
பத்தருக்குஞ்செய்யாப் பெருமைத்தொண்டு.

அநுபல்லவி.

வெற்றியுளவரிஞ்சி யூரில்குலம்
வேளாளராகிலும் வேந்தரவ்வூரில்.

சரணங்கள்.

பரமன்திருவடி மறவா திருக்கும்
பத்தர்சிவனடி யார்களைக் கருக்கும்
பெரும்பாதகிகளின் நாக்கை இடுக்கும்
பெருந்தண்டாயத்தால் பிசகாமல் ஒடுக்கும். க

நாசமாகஅவர் சத்தியே யறுக்கும்
நற்றொண்டைநெடுங்காலஞ்செய்துகொண்டிருக்கும்
வீசும்புகழ்பெற்ற கேசவன் துதிக்கும்
ஈசல்பதமடைந்து என்றைக்குஞ் செருக்கும். உ

## ஐயடிகள்காடவர்கோனாயனார்.

இராகம்-வசந்தம்-ரூபகதாளம்.

பல்லவி.

காஞ்சியரசனார்-ஐயடிகள்-காடவர்கோனாயனார்.

சரணங்கள்.

பல்லவர்குலத்தினர் பரமன்திருநெறி
பரவித்தரசாண்டு பல்லுயிரும்போற்றிட. க.

அடைதல்வேண்டிப்பிற அரசர்தேசங்களை
ஆதினட்படுத்திப்பல் அரசரும்பணிந்தார். உ.

தலங்கள்தோறுஞ்சென்று தரிசித்தாத்திருப்பணி
பலவுஞ்செய்தொவ்வொரு தலத்தில்வெண்பாபாடி. ௩

பாசத்தைநீக்கித்தம் புத்திரர்க்கரசேற்றி
கேசவன்போற்றிடும் ஈசனையடைந்தார். ௪.

## கணம்புல்லநாயனார்.

இராகம்-புன்னாகவராளி-ரூபகதாளம்.

பல்லவி.

கணம்புல்லநாயனார் செல்வரோ அவர்
பணம்போயும்பத்தியால் பெருஞ்செல்வநாயனார்.

சரணங்கள்.

திருக்குவேளூரிலே பத்தியிற்சிறந்து
பெருத்தசெல்வந்தனைப் பெற்றதைநினைந்து
திருக்கோயிலுக்குள்ளே திருவிளக்கேற்றி
பரனைத்தோத்திரஞ்செய்தல் பயனெனச்செய்து.

வறுமைவந்தும்புலி ஈஸ்வரரிடத்து
வாசல்வீடுஉள்ள பொருள்களும்விற்று
சிறுமைவந்துந்திரு விளக்கேற்றிவந்து
சென்றபின்யாவும் கணம்புல்லையரிந்து.

விற்றுநெய்வாங்கி விளக்கேற்றிவந்து
சற்றும்விலைபடாப் புல்லையெரித்து
பத்தர்புல்போதாமல் முடியையெரித்து
பத்தன்கேசவன்தொழும் பரமன்பதமடைந்து. க.

## காரி நாயனார்.

இராகம்-சாவேரி - ஆதிதாளம்.

பல்லவி.

காரிநாயனார் போலுமுண்டோதிருக்
கடவூரிலேதமிழ் கற்றமாபண்டிதர்.

அநுபல்லவி.

சீர்தமிழ்க்கோவை பெயரால்பாடித்தாம்
சீர்தமிழ்நாட்டுமூ வேந்தரிடஞ்சென்று.

சரணங்கள்.

அரசர்மகிழும்படி யுரைத்திடும்உரைகளை
அவர்நயமாக்கியே கவர்ந்திடும்பொருள்களை
அரன்றனக்காலயம் பலவற்றைக்கட்டுவித்
தடியர்க்குவேண்டிய திரவியந்தனைத்தந்து. க.

திருக்கைலாசகிரி மறவாதகருத்தினர்
தொல்லுலகமெங்கும் தம்மதுகீர்த்தியை
நிறுத்திப்பரமசிவன் திருவருளைப்பெற்று
நேர்ந்தனமனப்போல உடம்புஞ்சிவகிரி. உ.

வாசமதாய்கை லாசகிரிதனில்
கேசவன்போற்றிடு மீசன்பதமடைந்து
நேசப்பிரம்மானந்தம் நித்தியமாகவே
நின்றகண்டபரி பூரணந்தோய்ந்தனர். ந.

நெடுமாறநாயனார்.

இராகம் - ஸ்ரீரஞ்சனி - ஆதிதாளம்.

பல்லவி.

பாண்டிநாடாண்டோரே - சமணரை
மாண்டிடச்செய்தோரே.

சரணங்கள்.

சமணர்தம்போதனை சார்ந்தேயவர்மதம்
அமணருகதம் அரசேசெல்ல. க.

மங்கையர்க்கரசியர் மனைவியர்சிவமதம்
மந்திரிகுலச்சிறை நாயனாராகவே. உ.

இவர் சம்பந்தரை ஈண்டழைப்பித்திட
அவரேஅரசனைத் தீண்டியருள. ௩.

அரசகூன்நிமிரவே நெடுமாறரென
அரன்மதந்தழைக்கவே அரசைஇயற்ற. ௪.

நீசான்சமணர்களுசமேயடைந்தனர்
சைவம்போற்றிடு மீசன்பதமே. ௫.

## வாயிலார்நாயனார்.

இராகம் - பியாக் - ஆதிதாளம்.

பல்லவி.

வாயிலாரென்று சொல்லும் - அந்த
நாயனாரேமயி லாப்பூர்வேளாளர்.

சரணங்கள்.

தொண்டமண்டலந் தன்னில் - திரு
மயிலையென்னுமோர் தலத்தில் - எவர்
அன்டிறனுமவர் பரத்தில் - நித
நின்றுவாழுமொரு இடத்தில் - இவர். ௧.

ஞானமார்க்கமாய்ச் சிவத்தை - யொரு
நிமையுமறவா மனத்தை - பெற

ஞானதீபமே பவத்தை - விட
நீக்கிநின்றனர் அவத்தை - மின். உ.

பாசமற்றவோர் மனத்தை - பெற
நேசவானந்தமஞ் சனத்தை - ஆட்டி
கேசவன்றொழுஞ் சிவத்தை - நித
மாசையற்றடைந்தார் பதத்தை - இவர்.

## முனையடுவார்நாயனார்.

இராகம்-சங்கராபரணம்-ரூபகதாளம்.

பல்லவி.

முனையடுவார்நாயனார் மூலாதாரர்முனைமேலே.

சரணங்கள்

தினதினசிவ னடியருக்கு
தீஞ்சுவையோ டமுதளித்து
முனைதனிற் றோற்றவர்க்கு
மீளஜய மேயடைந்து.

வருபொருள்வாங் குப்வேளாளர்
திருநீடூர் சோழநாடு
அரனடியவர் சொன்னது
அனைத்துமீந் திடுமன்பர்.

அவர்பொருளிவர் தொண்டுசெய்து
கேசவன்போற் றிடுமரிய
சிவபதத்தை யடைந்து
சேவித்துநா ளுமுகந்து. ௫.

## கழற்சிங்கநாயனார்.

இராகம் - பியாக் - ஆதிதாளம்.

பல்லவி.

காடவகழற்சிங்கர் - ஈசன் - கழலன்றிவேறறியார்.

அநுபல்லவி.

காடவராஜர் சீர்குலத்திற்கோ
வாடைபுலத்தனைப் போரினில்வென்ற.

சரணங்கள்.

அவர்நாடெங்கும் அகண்டிடச்சைவம்
அரசர்திருவாரூரைச்சென்றாரே. க.

கோயிலிற்பூமா தேவிமுகந்து
கொய்ததுசெருத்துணை யவள்மூக்கை. உ.

அரசர்போதாதென் றறுத்தனர்கையும்
அண்டர்கள்புஷ்ப மாரிபெய்தாரே.

கேசவன்போற்றும் ஈசனார்பதத்தை
பாசமில்லாமல் நேசமோடடைந்தார். ௪.

## இடங்கழிநாயனார்.

இராகம்-செஞ்சுருட்டி-ரூபகதாளம்.

பல்லவி.

கோனாட்டரசர் இடங்கழியாரோ - அந்தக்
கோமானைசைவந் தழைக்கச்செய்தாரோ.

சரணங்கள்.

ஆலயங்கட்கு நித்தியநைமித்திகம்
மேலவிதிப்படிச் சிறப்பாய்நடத்தும். ௧.

ஆதியர்ம கேசுரபூசைக்கு
யாருங்கொடாமலே ஏகியரண்மனை. ௨.

நெல்லெடுத்தவப் பண்டாரத்தைக்கோ
நீரோநமக்குப் பண்டாரமென்று. ௩.

சொல்லிச்சிவனடி யார்களெல்லாம்
கொளுமயிடும்பறை யறைவித்தாரோ. ௪.

பாசமுமற்றுக் கேசவன்றுதி
நேசம்பதத்தை யென்றுமடைந்த. ௫.

---

## செருத்துணைநாயனார்.

இராகம் - கல்யாணி - அடதாளம்.

பல்லவி.

செருத்துணையல்லரோ - சிவத்துரோகம்
அறுக்கும்வாளரோ.

அநுபல்லவி.

மருகனுடேதஞ்சா வூரில்வேளாளர்
அருமைச்சிவபத்த ராகவவதரித்த.

சரணங்கள்.

திருவாரூர்சென்று தொண்டுசெய்துக்கொண்டு
இருக்கக்கழற்சிங்கர் இம்பமாதேவி. ௧.

மாலைகட்டுமண்ட பத்தருகோர்பூ
மேலொடுமோந்தனள் மூக்கையரிந்து. ௨.

விசும்புகழ்பெற்ற கேசவல்போற்றிடும்
ஈசன்பதந்தனக் கின்பமோடேகி. ௩.

## புகழ்த்துணைநாயனார்.

இராகம்-ஹம்சத்துவனி ரூபகதாளம்.

பல்லவி.

சிவாகமத்துவிதிப்படியே சிவபூசைபுகழ்த்துணை.

அநுபல்லவி.

அவர்செருவிலி புத்தூரதனில்
ஆதிசைவர் அன்பாய்ப்பூசை.

சரணங்கள்.

பஞ்சமுண்டாய்ப் பசிமிகப்பெற்று
பரசிவபூசை யாகும்போது

மஞ்சனக்கலசம் முடிமேல்வீழ
மாதவரும் அடியில்வீழ. க

அயர்ந்தவன்பர் சொப்பனத்தில்
ஐயனிதமோர் காசருளி
மயங்கிக்காசு பீடத்தின்கீழ்
மதித்துக்கொண்ட மெய்யடிமை. உ.

நேசமோடு பூசைசெய்து
நெடுங்கால மாவலோடு
கேசவனுந் தொழுதுபோற்றும்
ஈசன்பாத மேவினரோ. ௩.

## கோட்புலிநாயனார்.

இராகம் - சுருட்டி - அடதாளம்.

பல்லவி.

கோட்புலிநாயனார் போலெவரோ
குலம்வேளாள ரேயவரோ.

அநுபல்லவி.

சேட்டையிலாப்பதி நாட்டியத்தான்குடி
சேனைக்கதிபதி ராஜருக்கேதொண்டு.

சரணங்கள்.

ஆலயங்கட்கமு தாகவானுக்கு
அன்பொடுநெற்கோட்டை ஆணையிட்டுத்தன்

சிலச்சுற்றமே செலவழிக்காமல்
சீர்க்கட்டிப்போர்க்குச் சென்றுவருபுனே.க.

பஞ்சமேவந்தது பறித்தசுற்றம்
பாதகமென்றன்பர் பேதமில்லாமல்
அஞ்சியமனைவி ஆண்பிள்ளைதந்தை
ஆயினைவரை வாளொடுவெட்டிட. உ.

கேசவன்போற்றிடு மீசன்தோன்றி
கோட்புலியாரைத்தன் கூடவேகொண்டு
தேசச்சுற்றமும் பாபத்தினின்று
நீங்கிச்சுவர்க்கத்தை சேர்ந்தனர்நேரே. ௩.

பத்தராய்ப்பணிவார், பரமனையேபாடுவார், சித்தத்தைச் சிவன்பாலேவைத்தார், திருவாரூர்ப்பிறந்தார், முப்பொழுதுந்திருமேனிதீண்டுவார் முழுநீறுபூசிய முனிவர், அப்பாலு மடிச்சார்ந்தார்.

இங்கிலீசுமெட்டு.

கல்யாணிகள்.

பத்தராய்நித்தியம் பணிவாரும்
பரமன்றனையே பாடுவாரும்.

சித்தத்தைச்சிவன்பாலே வைத்தாரும்
சிறந்ததிருவாரூர்ப் பிறந்தாரும். ௨.

அத்தனைமுப்போதுந் தீண்டுவரும்
அரன்முழுநீறணி முனிவர்களும். ௩.

கத்தனையப்பாலுஞ் சார்ந்தாரும்
கேசவன்றுதிசிவ பதமடைந்தார். ௪.

---

## பூசலார்நாயனார்.

இராகம்-செஞ்சுருட்டி - ஆதிதாளம்.

பல்லவி.

தொண்டமண்டலந்திரு நின்றவூர்தனில்மனத்
தொண்டுசெய்வேதியர் பூசலார்.

சரணங்கள்.

அண்டர்பிரானுக் காலயங்கட்டுதற்
கற்பமுங்கிடையா தவர்மனத்தேகட்டும். ௧.

காஞ்சிபுரத்தினில் காடவராஜர்
கற்றளிகோவிற்கன்று கடவுள்வரோனென்றும். ௨.

பூசலார்கோயிலிற் போவேனென்ன
ஆசையுடனரசர் வந்தவனைப்பணியும். ௩.

நேசமோடேமனப் பூசைசெய்தேதிதம்
சேவனுந்தொழு மீசன்பதமடைந்தார்.

---

## மங்கையர்க்கரசியார்.

இராகம்-அமீர்கல்யாணி-ரூபகதாளம்.

பல்லவி.

மங்கையர்க்கரசியாரே நெடுமாறராஜருக்கு
மனைவியரசியாரே.

சரணங்கள்.

சோழராஜன் புத்திரி - அவர்
சைவசமய மித்திரி
பாழுஞ்சமணசமய சத்திரி - ஞான
சம்பந்தர்க்குப் பத்திரி.

சம்பந்தர்தாம் பாடும் - திருப்
பதிகத்தவர்பேர் கூடும்
சமண்மதத்திற்சார்ந்து வாடும் - பதி
சைவவழியைத் தேடும்.

பாண்டிநாட்டிற் சைவம் - பரி
பாலனஞ்செய் திருந்தும்
பதிஆண்டவரச சேரும் - அனு
கூலமாக விருந்தும்.

கேசவன்தொழு தேற்றும் - நித
மீசன்பாத மிரண்டும்
நேசநாயகனு ரோடும் - உள்ள
பாசமற்று அடைந்தும். ௪.

## நேசநாயனார்

இராகம்-எதுகுலகாம்போதி-சாப்புதாளம்.

பல்லவி.

காம்பீலிநகரத்தில் சாலியர்
குலத்துத்தலைவர் சிவனடிநேசநாயனார்.

சரணங்கள்.

மனத்தின்செய்கைசிவன் திருவடிக்காக்குந்தங்கள்
இனத்தின்செய்கைசிவ னடியார்களுக்காக்கும். ௧.

வாக்கின்செய்கையஞ் சாக்ஷரமாகும்நெய்யும்
வஸ்திரம்கோவண மடியர்க்கேவழங்கும். ௨.

குலவன்மைதவராது பலருந்துதிக்கும்அன்பர்
கேசவன் போற்றிடு மீசன்பதமடைந்தார். ௩.

## கோச்செங்கட்சோழநாயனார்.

இராகம்-நாதநாமக்கிரியை - ரூபகதாளம்.

பல்லவி.

திருவானைக்கா விலிங்கமேத்
சருகறநூற்கட்டுஞ் சிலந்தி.

அநுபல்லவி.

அருந்தவக்கோச் செங்கட்சோழ
அரசராக அவதரித்தார்.

சரணங்கள்.

பூர்வஜன்மமுணர்ந்தே பிறந்துசைவநெறியோ
டார்வமுற்றுஅரசியற்றி ஆலயங்கள்கட்டுவித்து. க.

சிதம்பரத்தையடைந்தே சிவன்திருவடிவணங்கி
நிதம்பணியுமந்தணர்கள் நிற்குமாளிகைகட்டுவித்து. உ.

கேசவன்தொழுதேற்றும் கனகசபாபதியை
நேசித்தவர்திருவடியின்நீழலையடைந்தாரோசோழரே. ௩.

---

## திருநீலகண்ட யாழ்ப்பாணநாயனார்.

இராகம் - கமாஸ் - ஆதிதாளம்.

பல்லவி.

திருநீலகண்ட யாழ்ப்பாணர்
தீஞ்சுவையாகினர் திருவுளமதனுக்கு.

அநுபல்லவி.

திருவெருக்கத்தம் புலியூரில்சிவன்
திருப்புகழ்யாழிலிட் டுத்தினம்பாடும்.

சரணங்கள்.

சோழநாட்டிற்சிவத் தலங்களைச்சேர்ந்து
 சேவித்துப்பாண்டி நாடடைந்து
பாமொழிமதுரையி லெந்தன்சொக்கேசனை
 வாழியென்றேபாட வந்துபொற்பலகை. ௧.

வல்மீகநாதனைத் திருவாரூரினில்
 வணங்கவடதிசையில் வாயில்வருக்க
யின்சீர்காழியில் ஞானசப் பந்தர்
 பெருந்திருவடிகளை யடைந்துவணங்க. ௨.

பாசமற்றுச்சம் பந்தர்பதிகத்தை
 பாடிநல்லூர்ப் பெருமணத்தில்
சேசவன்போற்றிடு மீசன்பாதங்களை
 கண்டுகளிக்கவே கருத்துடன்செய்த. ௩.

சடையநாயனுர்.

இராகம் - பியாக் - ஆதிதாளம்.

கண்ணிகள்.

திருமுனைப்பாடி தென்னாட்டதனில்
 திருநாவலூரில்
அருமையான அவ் வாதிசைவர்குல
 மதனிலவதரித்தார். ௧.

சடையனுறோறும் வேதியர்கலை
சிவனருளாட்கொள்ள
விடைகொள்சுந்தரரைப் புத்திரராகப்
பெற்றபேறும்பெற்றார். உ.

நேசமோடுசிவ பூசைசெய்தகில
ஆசையற்றுஅருளால்
கேசவன்தொழுங் கைலைநாதனைக்
கண்டுபேறும்பெற்றார். ௩.

## இசைஞானியார்.

இராகம்-ஆனந்தபைரவி- ரூபகதாளம்.

பல்லவி.

பேறெவற்றிலும் அருமைப்பிள்ளை
பேறுசுந்தரர்பேறே-பெற்றதாய்
நீறணிமேனி ஆதிசைவஇசை
ஞானியார்நற்றவப் பேறே.

சரணங்கள்.

உலகமெல்லாம் உய்யச்சமயம்
உகந்தகுரவராகி - உற்பனம்
பலசனங்களும் பாசமகற்றி
பரகதிக்கு வித்தேயாகும். க.

திருத்தொண்டர்புராணக்கீர்த்தனைகள்.

யாவருமெய்ஞ் ஞானவொளியை
யெய்திகத்தைநீங்கிச் - சிவன்றன்
சேவடியைச் சகத்துளோர்கள்
சேருதற் குபாயமாக. உ.

நேசனெம்பி ரானுக்கென்று
நேர்ந்தபிள்ளைபேறு - பெற்றுயிவ்
கேசவல்தொழு மீசன்றன்னை
கன்றுபேறு பெற்றுமுய்ந்தார்.

திருத்தொண்டர் புராணக்

கீர்த்தனைகள்

முற்றிற்று

ஆண்டகுருவின் அடியிணைசர

சிவமயம்.

# குருதரிசன முதலான
## தனிக்கீர்த்தனைகள்.

இராகம்-யமுனா - ரூபகதாளம்.

பல்லவி.

அற்புதச்சேவை யருளினாய்
அம்மயிலையிலேசித்தம் மயிலையிலே.

சரணங்கள்.

அற்புதச்சேவை யருளினாய்
அருகிலியானு நாடினேன்
பொற்பதமுநோக முச்சந்திவீதியில்
பற்பலவல்பருந் தற்பரநீயும்வந் -(அற்புதச்) ௧.

தீதிகர்போல் வரவைநோக்கி
தேஜோமயத்தைக் கண்டுபிரியங்க
காசினியருங் கடையனுனும்
காணக்காட்சி காத்துநீத்த. ௨

சொந்தமதாக எந்தனை நீயும்
சுந்தரரஞ்சித புஞ்சிரிப்புக்கொண்டு
சந்ததம்வாழ வாவென்றெனை
சொக்கிமயக்கியே சற்குருபோல்வந்து. ரு.

கேசவல் தொழுமுன் குஞ்சிதபாதம்
கேட்டசித்தியு முத்தியுமீயும்
வாசமென்னுள் நேசமோடு
வந்துநாளும் வாழவாழீ - (அற்புதச்.) சு.

---

இராகம்-இந்துஸ்தான்காப்பி-ஆதிதாளம்.

பல்லவி.

தாயே நீயே காட்சியையீந்தும்
தனியந்தனக்குச்சத் காட்சியையீந்தும்.

சரணங்கள்.

ஆனந்தபூரணி அன்றடியேனுக்கு
ஆட்சிநீயேயென ஆதரித்தெல்குறை - (தாயே) க

மாதங்கிசத்திம ஞேன்மணியோர்மலை
மாதுருபோலடியேன்கண்டுமெல்குறை (தாயே) உ

உன்னதகோபக் குறிப்பினதட்செயல்
உன்னிபரித்திலன் சின்னவனெல்குறை - (தாயே) ரு

அஷ்டசித்தித்தனை யன்டர்களுக்கருள்
அன்னமேஅடியேற் கருளவுமென்குறை-(தாயே) ௪.

உந்தனைக்கண்டுமுன் சுந்தராஞ்சித
உன்னதபாதத்தைக் காணவுமென்குறை- (தாயே) ௫.

கேசவனுந்தனைக் கண்டபோதொன்றையும்
பேசப்பெறாத பெரும்பிழையென்னவென் (தாயே)

இராகம் - பியாக் - ஆதிதாளம்.

பல்லவி.

நீர்த்துநெஞ்சேநீ - ஜனனம் - நீர்த்துநெஞ்சேநீ.

சரணங்கள்.

இந்திரவானவர் சந்திரசூரியர்க்
கந்தியமாவது ஆழ்ந்தறித்து. ௧.

அண்டமெலாமொரு வெண்குடைநீழலில்
ஆண்டவரசர்மண் ணுறைதறிந்து. ௨.

மண்பெண்ணாசை மயக்கிக்கெடுப்பதை
மாற்றுமுபாயமே மீத்துமறிந்து. ௩.

கலைசைக்கேசவன் கண்டமயிலையில்
காட்டியசற்குரு பாதநினைந்து - (நீர்த்து.) ௪.

# தனிக்கீர்த்தனைகள்.

இராகம்-தன்னியாசி-ஆதிதாளம்.

பல்லவி.

சற்குருதரிசன மானவர்சஞ்சலம்
சத்தியமாய்த்தீரும்.

அநுபல்லவி.

நிற்குணப்பிரம்ம நிறைந்துதேஜோன்மய
அற்புதரூபமாய்த் தற்பரனுள்வந்த.

சரணங்கள்.

சிற்பரனேவர ஜீவன்முத்தராய்
சிந்தையவிழ்ந்துபின் சின்மயமாகியே
அற்புதவானந்த நிஷ்டையிலாழ்ந்து
அகண்டபரிபூர ணானந்தந்தோய்வர். ௧.

ஆயுளின்தீர்க்கமு மரோகதேகமும்
அல்பருமைகண்ட ஐசுவரியமுமடைந்து
செயருநற்குண ராகவெண்சித்தியும்
சேர்ந்தெவரும்வணங் கும்படியாகுவர். ௨.

அலைமனமகல அஷ்டகஷ்டங்களும்
அதிநஷ்டஞ்சத்துரு மகன்றுபுனிதராய்
கலைசக்கேசவன் கண்டமயிலையில்
கோட்டிடசற்குரு போலவுங்கண்ட-(சற்குருதரி) ௩.

## இராகம்-யமுனா-ரூபகதாளம்.

### பல்லவி.

வந்ததேகம்விழுமுனே வாழப்பரத்தொடே-நீ
வாவென் னெஞ்சமே.

### சரணங்கள்.

வந்ததேகம்வீழில் எந்ததேகமோகேள்
உந்தனுக்காண்டவர் பந்தப்படிக்கீவர். ௧.

ஐயோவுன்மானிட தேகமனைத்திலும்
அரிதரிதெல்றேநீ யறிந்துங்கெட்டாயே. ௨.

மண்பெண்ணுங்கூட வருமென்றுநீயும்
மயங்கினைமாய்கை மறுத்தருள்தேடி. ௩.

கேசவனேசன் குருபரன்பாதத்தை
சும்பிட்டுறவாய்க் குறித்துக்கொண்டாடி-(வந்ததே)

## இராகம்-பந்துவராளி-ரூபகதாளம்.

### பல்லவி.

அருசேசெல்லன்றருள் வாயே - உன்
தஞ்சமென்றடைந்தேன் தாயே.

அநுபல்லவி.

வஞ்சிசிவகாம வல்லியே நீயொரு
வனமாதரு பரிபூரண
வடிவாய்வந் தடியேனுளம்.

சரணங்கள்.

சஞ்சலத்தியெரித் தெளியேன் - சார்வ
காலமுமேமிக அளியேன் - உந்தன்
தஞ்சமென்றடைந்துந் தடையேதுதாயேஇது
தருணந்தருணங் கருணை
கரிகாத்தருள் கடையேனையும். ௧.

தீவினையென்றொரு பழியேன் - உன்னை
நாவிக்கண்டுதொழத் தடையேன் - தினம்
ஆவினைக்கன்றுபோ லலறியேயழுமெந்தனுக்
கதிசுந்தரி ததியீதருள்
ஆராதரிப் பாரெந்தனை. ௨.

கேசவன்கண்டவுன் காக்ஷி - கன்ம
மாசாபாசத்தையு மவிக்கும் - உந்தன்
தாசன்தவித்தலைத் தாழ்ந்திடத்தீர்த்திடும்
தஜ்ஜேஜம் தகஜேஜம்தத்திமி
தாண்டவர் பாகத்தம்மே - (அஞ்சே) ௩.

இராகம்-கமாஸ் - ரூபகதாளம்.

பல்லவி.

மயிலைவாராரோ-மறுபடி-மதித்துப்பாராரோ.

அநுபல்லவி.

கயிலைவாழ்கங் காதரரோயன்று
கண்டசற்குருபோற் கடையன்காண.

சரணங்கள்.

கடைக்கண்பாராரோ - எளியன்றன்
கவலை தீர்க்காரோ
அடுத்தவெந்தனை யாதரித்துப்பர
மானந்தந்தோய்ந்திட ஐயன்சற்குருவாய். ௧

அன்பைவளர்த்தேனே - அவர்மீ
தின்புற்றிருந்தேனே
துன்பந்துடைத்துத் தெளிவிலாவெனக்கும்
தோன்றிக்கலத்தல் செயச்சற்குருவாய். ௨

தேசமொன்று மிலையே - அவரன்றி
வேசித்தன்மையிலையே
கேசவன்போற்றிடக் கண்டம்மயிலையில்
காட்டியவாறு கலக்கச்சற்குருவாய்-(மயிலை.) ௩

## தனிக்கீர்த்தனைகள்.

### இராகம்-இந்துஸ்தான்காப்பி-ஆதிதாளம்.

### கத்துகள்.

தாயேநீயே தயவாய்த்தரிசனம்
தந்தும்பனையே தனையேகுறையோ.

நாயேனுனையே நம்பிப்பணிந்தேன்
வாயேன்வேண்டும் வரமேதருக.

பேயேன்றன்னை, பேதித்துலகம்
பிழையேன்காப்பாய் இனிப்பேரரசே.

சேயேகேசவன் தாயேயுனக்கு
சேதித்தவஞ்சக சலத்தைக்கழிப்பாய்-(தாயே

### இராகம் - ஆகிரி - அடதாளம்.

### கண்ணிகள்.

ஆண்டகுருவேஉன்னை யடுத்துமலைதலோ
ஐயையோஅடியேனு ளாசையோ.

காண்டகவனமெரி கனலொத்தபுவிமாய்கை
மூண்டெரித்தெளியேனை மீறுதே.

உத்தமாவுன்னரு ளல்லாதுஉலகத்தில்
உய்வனோஊழ்வினை யாறவே.

சுத்தனை உத்தனைக் கேசவன்மனைக்கண்ணால்
கன்மநெங்குறையோ கடைத்தேற்றுவாய். ௪.

## ஆனந்தக்களிப்பு.

பல்லவி.

சரணஞ்சரணங் குருவே - சிவ
சற்குருவேஉனைச் சார்ந்தனன்சிறியேன்.

சரணங்கள்.

சிறுமையைச்சேதித் தெளியேன் - தன்னை
சேரவாவென்றல்னை, செப்பவெந்தானோ
மறுமைமகேந்திர போகம் - இன்று
மாறவைத்தாலு மறியேன்மகேசா. ௧.

எல்லாமா யல்லவுமாகி - என்றும்
எங்குநிறைந்த,என் கண்ணே,எங்கொளித்தாய்,
கல்லாதநாயேனை நீயே - கன்ம
காரணம்போக்கியே கடைத்தேற்றுவாயே. ௨.

உலகத்திலுழியன் நானே - என்றும்
உய்வதரிதுன் னருளேயல்லாது
பலசற்றும்பாச மடக்கா - அந்த
பண்பொல்லைப்போக்குப் பரமகுருவே. ௩.

சேசவன்கண்டவுன் காக்ஷி - கன்மம்
ஆசாபாசத்தையு மவித்தேஅருளே
நேசமாய்நின்றிடச் செய்யே - நிதம்
நின்மலானந்தமாய் நிஷ்டைபுரியே-(சரணம்.) ச

இராகம்-நீலாம்புரி.

## ஆராரோவென் கண்ணிகள்.

திருவருளேஎக்குந் நிகழ்ந்தபரிபூரணமே
அருவேஉனையறிந்தோர் ஆராரோஆராரோ. க

இப்பெருக்கே இறையேஎன்னின்சுவையே
அன்பாலுனையறிந்தோர் ஆராரோஆராரோ. உ

சித்தாந்தவீதிவரும் சித்தேசிவமே,என்
அத்தாஉனையறிந்தோர் ஆராரோஆராரோ. ௩

அருமறையுங்காணு அகண்டபரிபூரணமே
அருவேஉனையறிந்தோர் ஆராரோஆராரோ. ச

பொய்யானமெய்யையிந்தப் பூவுலகிலேவெறுத்து
ஐயாஉனையறிந்தோர் ஆராரோஆராரோ. ரு

உளமகிழ்ந்தேஊட்டும் உருவேஅருவேயோ
அளவிலாநின்பெருமை அறிந்தவர்கள் ஆராரோ. சா

கன்றூரக்கண்டு களித்துக்கலத்தல்செய
அன்றூஉனையறிந்தோர் ஆராரோஆராரோ. ௭.

அண்டசராசரங்களில்நீ அமைத்தஉறுப்பின்பெருமை,
கண்டுஅதிசயித்துக் களித்தவர்கள்ஆராரோ. ௮.

கேசவனுங்கண்டுதொழுங் கேவலமேஆவனுள்ளோர்
ஆசைவிட்டுத்தாமறிந்தோர் ஆராரோஆராரோ. ௯.

## தேவாரப்பண்.

ஐம்புலப்பொறிகலங்கி அறிவழிந்தைம்மேலுந்தி
அம்பிகைநாதாநீயே அலமந்தபோதென்றூவி
அம்பவிதனிற்பிறக்கா தஞ்சேலெலன்றருள்செய்வாயுன்
அம்புயபதத்தைச்சேர்ந்து அடியனேன்வாழுதற்கே.

## மங்களம்.

இராகம்-சௌராஷ்டிரம்-ஆதிதாளம்.

பல்லவி.

மயிலைசற்குருவுக்கு மங்களம் - சுபமங்களம்.

சரணங்கள்.

பதஞ்சலிபூசிக்கும் பாதாரவிந்தத்திற்கும் - (மயிலை)
அம்பிகைபாகமுள்ள ஆநந்தத்தாண்டவர்க்கும் - (மயி)

யோகிகள்தேடுகின்ற ஏகநாயகனுக்கும் - (மயிலை)
தேஜோமயமான தேசிகன்பொன்னடிக்கும்-(மயிலை)
அடியேனைவாவென்று அழைத்தபுகழ்சிரிப்பிற்கும்(ம)
அருவருளாட்கொண்ட அறுபத்துமூவர்க்கும்-(மயி)
அன்பெனுமலர்சாத்தும் அன்பரனைவர்க்கும் - (மயி)
கேசவன்பூசிக்கும் தேசிகன்பொன்னடிக்கும்.

மயிலைசற்குருவுக்கு மங்களம் - சுபமங்களம்.

---

## தனிக்கீர்த்தனைகள்

முற்றிற்று.

ஆண்டகுருவின் அடியிணைசரணம்.

# சோதனைபத்திரம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தல். |
| --- | --- | --- | --- |
| கா | கஎ | ருய்ப்பொருட்டு | ருய்பொருட்டு |
| கரு | கக | போர்ச்செய்தி | போர்செய்தி |
| கரு | ககூ | போர்ச்செய்ய | போர்செய்ய |
| கரு | கஎ | புகழ்ப்பெற்ற | புகழ்பெற்ற |
| அச | க | லன்றிஇஞ்ஞே. | லன்றிஇந்நோ |
| அச | கஉ | தனியந்தனக்கு | தனியன்றனக்கு |

DR. U.V.S. IYER LIBRARY ★ MADRAS-90 ★
24508